பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 08 வெள்ளிக்கிழமை (22.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 177

## சகலரும் ஏற்கக்கூடிய

# நிரந்தர அரசியல் தீர்வு விரைவில்; சகல தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு



### இந்திய அதிகாரிகளிடம் ஜனாதிபதி உறுதி



கொழும்பு, மே 22

தற்போது யுத்தம் முடிவடைந்துவிட்டதால் சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை இலங்கை அரசு விரைவில் முன்வைக்கும் என்று இந்தியாவிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்திருக்கிறார்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளுடனும் பரந்துபட்ட பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க உள்ளதாகவும் ஜனாதிபதி இந்தியப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் விசேட பிரதிநிதிகளாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனும் வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனனும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று வியாழக்கிழமை அலரிமாளிகையில் சந்தித்து உரையாடினார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமாறு அச்சந்திப்பில் அவர்கள் கோரி

(02 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் யுத்த மீறல்களை இந்திய அரசு நிராகரிக்கவோ உறுதிப்படுத்தவோ மாட்டாது

### கொழும்பில் சிவ்சங்கர் மேனன் தெரிவிப்பு

கொழும்பு, மே 22

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரணம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் பகிரங்கமான உறுதிமொழியை வழங்குகின்ற நிலையில், அதனை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அதேவேளை, அவரது மரணச்சான்றிதழை இலங்கை அரசிடம் கோருகின்றோம். இலங்கை அரசின் யுத்த மீறல்களை எம்மால் நிராகரிக்கவோ உறுதிப்படுத்தவோ முடியாது.

- இவ்வாறு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அக்குழு மேற்கண்டவாறு தெரிவித்தது.

இலங்கையில் யுத்தமீறல்கள் இடம்பெற்றனவா என்பதை உறுதிப்படுத்தும் நிலையிலோ நிராகரிக்கும் நிலையிலோ இந்திய அரசு தற்போதில்லை என இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

### ஒன்றுவிட்ட ஒருநாளைக்கு பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,மே 22

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை வழமை போல் ஒன்று விட்ட ஒருநாள் நடை பெறவிருக்கிறது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இத் தகவலைத் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

ஆசிரியர்: பொன். சக்திவேல்
தொகுத்து வழங்கும்
இலகுவழி ஆங்கிலம்

# வவுனியாவில் நூறுபடுக்கை வசதியுடன் வைத்தியசாலை அமைக்கிறது இந்தியா

### 30 தொன் மருந்துடன் இன்று 8 டாக்டர்கள் வருகின்றனர்

புதுடில்லி, மே 22

வன்னியில் நடைபெற்ற போரில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை வழங்கவென நூறு படுக்கை வசதிகளைக் கொண்ட வைத்தியசாலை ஒன்றை வவுனியாவில் இந்தியா அமைக்கவிருக்கின்றது.

உடனடியாக இயங்கவுள்ள இந்த வைத்தியசாலையில் பணியாற்ற எட்டு வைத்தியர்கள் இன்று இலங்கைக்குச் செல்கின் றார்கள்.

இவர்கள் 30 தொன் மருந்துப் பொருள்களை தம்முடன் எடுத்து வருகின்றார்கள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அகதிகள் வருகை; அவுஸ்திரேலியா முழு உஷார்!

கொழும்பு, மே 22

இலங்கையிலிருந்து பெருமளவு மக்கள் கடல் வழியாக தனது நாட்டுக்குச் சட்ட விரோதமாக கடத்தப்படும் அபாயம் குறித்து கவலையடைந்துள்ள அவுஸ்திரேலியா இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்துவதற்காக தனது பிரதிநிதிகள் இருவரை கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளது.

இலங்கையில் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்தமை தமது அரசுக்கு கவலைக்குரிய விடயமாகவுள்ளது என அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டிபன் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இந்த மக்களை நாட்டிலிருந்து வெளி

(16 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தக் குற்றத்துக்காக இலங்கையை விசாரிக்க ஐ.நாவிடம் வலியுறுத்துவதில் பல நாடுகள் தீவிரம்

கொழும்பு, மே 22

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து ஐ.நா. விசாரணைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தீவிரப்படுத்தியுள்ளன என 'த ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

பாதுகாப்புச் சபையில் இடம்பெற்றுள்ள 7 நாடுகள் இதற்கு ஆதரவு அளித்தன எனத் தெரிவித்துள்ள'த ரைம்ஸ்' பத்திரிகையில் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலின் விசேட அமர்வொன்றை

(02 ஆம் பக்கம் பார்க்க)

### பத்மநாதன் எம்.பி. நேற்றுக் காலமானார்

கொழும்பு, மே 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதன் தமது 62 ஆவது வயதில், தமிழ்நாடு மதுரையிலுள்ள அப்பலோ தனியார் மருத்துவமனையில் நேற்று

(16 ஆம் பக்கம் பார்க்க)

# 'உதயன்' ஆசிரியர் தாக்கல் செய்த உரிமை மீறல் வழக்கு வாபஸ்

கொழும்பு, மே 22

தாம் கடத்தப்பட்டு, பின்னர் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டமையை ஆட்சேபித்து 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் ஆசிரியர் ந.வித்தியாதரனினால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று வாபஸ் பெறப்பட்டது.

உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் அசோக சில்வா, சலீம் மார்சூக், பி.ஏ.இரத்னாயக்கா ஆகியோர் முன்னிலையில் இந்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை குறித்து விசேட விவாதம்

# மனித உரிமைக் கவுன்ஸிலின் முடிவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் பெரு வரவேற்பு

கொழும்பு, மே 22

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பாக இம்மாதம் 25 ஆம் திகதி விசேட அமர்வொன்றை நடத்துவது என ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் தீர்மானம் எடுத்துள்ளதை ஐரோப்பிய ஒன்றியம் பெரிதும் வரவேற்றுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஆனைக்கோட்டை சாவற்கட்டு

## அந்திக்குழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் காளியம்பாள் தேவஸ்தான

## புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா - விரோதி வருடம் - 2009





வைரவ காளி அம்பாள் அடியார்களே !

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் வைகாசி மாதம் 08 ம் நாள் (22.05.2009) வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நடைபெற எம் பெருமான் திருவருள் பாலித்துள்ளார். அத்தருணம் அடியார்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம். வைகாசி 09 ஆம் நாள் நாளை (23.05.2009) சனிக்கிழமை தேர்த் திருவிழா மு.ப. 10 மணிக்கு நடைபெறும். திருநெல்வேலி ஸ்ரீவாணன் சிற்பாலய ஸ்தாபகர் உயர் திரு செ.கந்தசாமி ஸ்தபதி அவர்களின் சிஷ்யனும், உடுவில் காளி அம்மன் கலையக ஸ்தாபகரு மாகிய உயர்திரு. சிற்பாச்சாரிய திலகம் தம்பிஐயா குகதாசனும் அவரது குழுவினர்களாலும் உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்தேருக்கு வர்ண வேலைகளை திருநெல்வேலி சிவன் கோயிலடி யைச் சேர்ந்த வர்ணக்கலை வேந்தன் திரு.ரவி அவர்களும் (தேவசுந்தரம் ரவி ஆட்ஸ்) குழுவினர் களும் செய்துள்ளார்கள்.

விழாவையொட்டி பல நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தேர்த்திருவிழா உபயகாரரும்,
நிர்வாக சபையினரும்.

| | |
|---|---|
| தேர் உபயகாரர்கள்: | திரு.க.மனோகரன், திரு.சு. நாகேந்திரம், திரு.தே.செளவுந்தராஜா |
| வரவேற்புரை: | திரு.ச.யோகேந்திரன் (தலைவர், ஆலய பரிபாலனசபை) |
| ஆசியுரை: | சிவ ஸ்ரீ கா. புவனேஸ்வரக்குருக்கள் (பிரதம குரு, மண்கும்பான் பிள்ளையார் கோவில்) |
| ஆலய குரு: | பிரம்ம ஸ்ரீ சு.பாலகணேஷசர்மா |
| பிரதம விருந்தினர்: | உயர் திரு. க. தேவராஜா (பீடாதிபதி , முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) |
| சிறப்பு விருந்தினர்: | திரு.சி.க.உதயசூரியர் (மருதடி தர்மகர்த்தா வழிபடுவோர் சங்கத்தலைவர், மானிப்பாய்) |
| கெளரவ விருந்தினர்கள்: | திரு.கந்தையா சிவராசா (சிரேஷ்ட விரிவுரையாளர், வணிக உயர்துறை,யாழ்ப்பாணம்), திரு.P.பிரதீஸ்வரன் (இந்து கலாச்சார அபிவிருத்தி உதவியாளர், வலிகாமம்), திரு.கோகலை (ஆசிரியர்) |
| நன்றியுரை: | திரு.இ.சிவகுமார் |

# நிரந்தர அரசியல் தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளனர். அதுவே இந்தியாவின் விருப்பம் என்று அவர்கள் வலியுறுத்தினர். அப்போது, சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு விரைவில் முன் வைக்கப்படும் என்று ஜனாதிபதி இந்தியப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தையும் தேசிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான அரசியல் ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக அனைத்து தமிழ்க் கட்சிகளுடனும் பரந்துபட்ட பேச்சுக்களைத் தாம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் எம்.கே. நாராயணன், சிவ்சங்கர் மேனன் ஆகியோருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை உடனடியாகக் காணவேண்டியதன் அவசியம் குறித்து இருநாட்டுப் பிரதிநிதிகளும் வலியுறுத்தினர். அத்துடன், 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்தும் அமுல்படுத்தப்போவதாக இலங்கை அரசுதெரிவித்தது எனக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நலன்புரி நிலையங்களை அகற்ற நடவடிக்கை

இலங்கையில் இராணுவ நடவடிக்கை முடிவடைந்ததைத் தொடர்ந்து தற்போது நிவாரணம், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், நல்லிணக்கம் மற்றும் நிரந்தர அரசியல் தீர்வு குறித்து கவனம் செலுத்துவதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளது என்பதை இருதரப்பும் ஏற்றுக்கொண்டுள்ளன என்றும் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இருதரப்புகளும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களை அவர்களது பகுதிகளில் மீண்டும் உடனடியாக மீள்குடியேற்ற வேண்டியதன் அவசியத்தையும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார வசதிகளை வழங்கி இயல்பு வாழ்க்கையை மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கை அரசு நலன்புரி முகாம்களை கூடிய விரைவில் அகற்றி 180 நாட்களில் மக்களை அவர்களது பகுதிகளில் மீளக்குடியமர்த்துவது பற்றி சிந்தித்து வருவதாக தெரிவித்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

(அ-சி)

# யுத்தக் குற்றத்துக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தவாரம் ஜெனிவாவில் நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

எனினும், இந்த அமர்வின் இறுதியில் கடுமையான அறிக்கையொன்றை வெளியிடுவதற்கான ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

மனித உரிமைக் கவுன்ஸிலில் இடம் பெற்றுள்ள 47 நாடுகளில் 17 நாடுகள் இலங்கையில் யுத்த அட்டூழியங்கள் குறித்து விசாரணைகள் இடம்பெறவேண்டும் என அறிக்கை வெளியிடுவதற்கு இணங்கியுள்ளன.

மனித உரிமைக் கவுன்ஸிலில் இடம் பெற்றுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா ஆகிய நாடுகளின் இந்த முயற்சிக்கு ஆர்ஜென்டீனா, பொஸ்னியா, கனடா, சிலி, மெக்ஸிக்கோ, மொறிசியஸ், தென்கொரியா, சுவிட்ஸர்லாந்து, உக்ரைன், உருகுவே ஆகிய நாடுகள் ஆதரவளித்துள்ளன.

இதேவேளை, இதனைத் தடுப்பதற்கான முயற்சிகளில் இலங்கை தீவிரமாக இறங்கியுள்ளது. கியூபா உட்பட பொதுநலவாய நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளை மஹிந்த ராஜபக்ஷ அரசு மேற்கொண்டுள்ளது.

மனித உரிமைக் கவுன்ஸிலில் இடம் பெற்றுள்ள 17 நாடுகள் பொதுமக்கள் மீதான தாக்குதலையும், பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியதையும் கண்டிப்பதற்கு இணங்கியுள்ளன.

இலங்கை அரசின் மனிதாபிமான சட்ட மீறல்கள் குறித்து மனித உரிமை கவுன்ஸில் கவலை தெரிவிக்கவேண்டும். சர்வதேச தராதரத்திற்கு ஏற்ப விசாரணைகள் இடம்பெறவேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட வேண்டும் என இந்த நாடுகள் கருதுகின்றன. இது தொடர்பான பேச்சுகள் தொடர்கின்றன.

காஸா குறித்து தனது சொந்த விசாரணைகளை மேற்கொண்டமை போன்று இலங்கை விவகாரத்திலும் மனித உரிமைக் கவுன்ஸில் தனது சொந்த விசாரணைகளையே மேற்கொள்ளவேண்டும்.

எனினும், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்த மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு கடந்த வாரம் மனித உரிமை கவுன்ஸிலுக்குத் தெரிவு செய்யப்பட்ட அமெரிக்காவுக்கு அடுத்த மாதம் வரை வாக்களிக்கும் உரிமை கிடையாது. எனினும், வோஷிங்டன் கடுமையாகக் கருத்துத் தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(அ-சி)

## மரண அறிவித்தல்

### ஜோசெப் நந்தாவதி

ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகக் கொண்ட ஜோசெப் நந்தாவதி நேற்று (21.05.2009) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஆராதனையும் நல்லடக்கமும் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.ஜோசெப் (கணவர்).

## தவறிவிட்டது

ஊரெழு கிழக்கு, சுன்னாகம் என்னும் முகவரியைச் சேர்ந்த திருநாமம் கமலேஸ்வரி என்பவரது தேசிய அ.அட்டை (536122702V) 11.05.2009 அன்று யாழ்ப்பாணத்திற்கும் கச்சேரிக்கும் இடையில் மினிபஸ்சில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியில் ஒப்படைக்கவும்.



TVS விற்பனையில் * scooty Pep +
TVS LANKA (Pvt.) Ltd. இன்
அங்கீகாரம் பெற்ற யாழ். விற்பனை முகவர்
யசோ மோட்டேர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
★ வோக் ஒயில், 3000 K.m வேலை செய்யக் கூடிய இன்ஜின் ஒயில் விற்பனைக்குண்டு.
இலவசம்
* மூன்று சேவிஸ்
* ஜக்கற்
* ஹெல்மெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அகதிகளுக்கு விரைந்து உதவ விடாமல் சர்வதேசத் தரப்புகளைத் தடுப்பது ஏன்?

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து விட்டதாக அறிவித்துக் கொண்டாட்டம் நடத்துகின்றது கொழும்பு அரசு.

இதேவேளை-

வன்னியில் நேரடியாக யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு, பல்லாயிரம் உறவுகளின் உயிர்களைக் காவு கொடுத்து, மோசமான உடற் காயங்களுக்கு உள்ளாகி, உடைமைகளை இழந்து, வாழ்விடங்களைத் துறந்து பேரவலப்படும் சுமார் இரண்டரை லட்சத்துக்கும் அதிகமான தமிழ் ஏதிலிகள் சொல்லொணாத் துன்ப துயரங்களுக்குள் சிக்கித் தவித்து அல்லாடுகின்றார்கள். குடும்ப உறவுகள் சிதறுண்டு சின்னாபின்னமான நிலை. ஒவ்வொரு அகதியும் 'பயங்கரவாதி' ஆகப் பெரும் சந்தேகத்துடன் நோக்கப்படும் பீதியான சூழல்.

இந்த நூற்றாண்டின் மிக மோசமான பேரனர்த்தத்துக்குள் இப்படி லட்சக் கணக்கில் தமிழினத்தவர்கள் சிக்கித் துவண்டு அல்லாட, அதுபற்றிச் சிறிதும் - கிஞ்சித்தும் - கவலைப்படாமல் தன்பாட்டில் வெற்றிக் கொண்டாட்டத்தில் மூழ்கித் திளைக்கின்றது தென்னிலங்கை.

போரியல் வெற்றி என்று தான் பிரகடனப்படுத்தும் இந்த 'வரலாற்றுச் சாதனை' குறித்து பௌத்த - சிங்களத் தரப்புகள் பெருமிதம் கொள்ள, தோல்வியடைந்து அவமானப்படுத்தப்பட்ட தரப்புப் போன்று தமிழினம் நடத்தப்படும் இக்கட்டு.

யுத்தம் முடிவுற்றதாக அரசு அறிவித்துள்ள இந்தநிலையில் கூட இனங்களுக்கு இடையே பிளவும், பிரி வும் இவ்வாறு துலாம்பரமாகத் தெரியும் நிலைக்கு விரிந்து, விசாலித்துக் கிடக்கின்றது என்பதுதான் யதார்த்தம்

யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டதான உத்தியோகபூர்வ அறிவிப்பும் வெளியிட்டாகிவிட்டது.

ஆனால், அடிப்படை வசதிகளின்றி, வெயிலில் தகிக்கும் வெறும் கூடாரங்களுக்குள் உணவு, மருத்துவ தேவைகளை நிறைவு செய்ய முடியாது அவலப்படும் தமிழ் அகதிகளை நெருங்கி, அவர்களின் அவசர, அத்தியாவசித் தேவைகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட சர்வதேச தொண்டர் அமைப்புகளுக்குத் தொடர்ந்தும் தடை விதிக்கின்றது கொழும்பு.

யுத்தப் பிரதேசத்தில் இதுவரை சிக்குண்டு, அந்தக் கொடூரங்களை நேரடியாக அனுபவித்த மக்களை, இந்த யுத்தம் முடிந்த கையோடு சர்வதேச தரப்புகள் சென்று சந்திக்க அனுமதித்தால் இதுவரை 'சாட்சியம் ஏதுமில்லாத யுத்தத்தை' நடத்தி, அதன்மூலம் தாம் சூடிய வெற்றிவாகையின் பின்னால் புதைந்துகிடக்கும் பெரும் மர்மங்கள் பற்றிய உண்மை விஸ்வரூபமாக வெளிப்பட்டுவிடும் என்ற அச்சம் அரசுத் தரப்புக்கு.

அதனால்தான், தென்னிலங்கையில் பௌத்த - சிங்கள மக்களின் ஏகோபித்த ஆதரவை சுவீகரிப்பதற்காக யுத்தம் வெற்றிகரமாக முடிவுற்று விட்டதாக அறிவித்த அரசு, அதன் பின்னரும் கூட சர்வதேசத் தரப்புகள் அந்த யுத்தத்தினால் அகதிகளானோரை நெருங்கி அரவணைக்க விடாமல் தடை போடுகின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் கூட அகதிகளின் பல முகாம்களை நெருங்க விடாமல் தடுக்கப்படுகின்றனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துக்கும் சில முகாம்களுக்குச் செல்லமுடியாதவாறு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த அகதிகள் விடயத்தில் ஏதும் செய்ய முடியாமல் தடுமாறு கின்றது ஐ.நா.சபை.

யுத்தம் முடிவடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டாலும், அதன் முடிவுக் கட்டத்தில் பல்லாயிரக் கணக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் கோரமாகக் கொல்லப்பட்ட கொடூரத்தின் பின்னணி குறித்து ஆய்வுகள், விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மை வெளிக்கொண்டு வரப்படவேண்டும். இக் கொடூரங்களின் சூத்திரதாரிகள் - யுத்தக் குற்றங்களை இழைத்தவர்கள் - சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற வலுவான குரலும் கோரிக்கையும் சர்வதேச மட்டத்தில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றது.

இந்த விடயத்தை வற்புறுத்தி - வலியுறுத்தி - பல வல்லாதிக்க நாடுகள் உட்பட்ட சர்வதேச தரப்புகள் முழு மூச்சாகவும் காரியத்தில் இறங்கியிருக்கின்றன.

இந்தப் பின்புலத்திலேயே இரண்டரை லட்சத்துக்கும் அதிகமான போர் அகதிகளுக்கு உரிய - அவசர - உதவிகளை சர்வதேசத் தரப்புகளை வழங்கிவிடாது தடுக்கும் வகையில், அந்த அகதிகளை அத்தரப்பினர் நெருங்க முடியாதவாறு தடை போடப்படுகின்றது. என்பதில் சந்தேகம் எதுவும் இருக்கமுடியாது.

பேரவலப்படும் அகதிகளின் கதி என்னவாகியும் போகட்டும், எமது போரியல் வெற்றியின் பின்புல சூத்திரம் அம்பலமாகி விடாமல் தடுப்பதுதான் முக்கியம் என்ற கரிசனையில் கொழும்பு செயற்படுகின்றதோ என்ற ஐயமே சுயாதீனத் தரப்புகளுக்கு.

இந்த உள் இரகசியத்தைப் புரிந்து, உள்வாங்கிக் கொண்டு அதற்கு ஏற்ப காய்களை நகர்த்த வேண்டியது இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட சர்வதேசத் தரப்புகளின் முக்கிய பொறுப்பாகும்.

# நலன்புரி நிலையங்களுக்குத் தொண்டுநிறுவனங்கள் அனுமதிக்கப்படாமை குறித்துப் பிரிட்டன் அதிருப்தி

லண்டன், மே 22

இலங்கையின் நலன்புரி நிலையங்களுக்கு தொண்டு நிறுவனப் பணியாளர்கள் சுதந்திரமாக செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இந்த நிலைமை கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் பிரிட்டன் தெரிவித்துள்ளது.

தொண்டு நிறுவனங்கள் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று பணியாற்றுவதனை அரசாங்கம் தொடர்ச்சியாக தடுத்து வருவதாக பிரிட்டன் குற்றம் சுமத்தியுள்ளது.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறிச் செயற்பட்டவர்களுக்கு எதிராகச் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கு நிவாரணங்களை வழங்கக்கூடிய சக்தி அரசாங்கத்திடம் இல்லாத போதிலும் தொண்டு நிறுவனங்களை சுதந்திரமாக பணியாற்ற அரசாங்கம் விடுவதில்லை என பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் தெரிவித்துள்ளார்.

மோதல் வலயங்களுக்குச் செல்ல அனுமதியளிக்கப்படும் என்ற இலங்கை வெளிவிவகார அமைச்சரின் வாக்குறுதி வரவேற்கத்தக்கதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பிரித்தானியா தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் என அவர் தெரிவித்துள்ளார். (50)

# அகதி முகாம்களில் சிறுவர்கள் ஆயுதக் குழுக்களால் கடத்தல்!

## மனித உரிமை அமைப்புகள் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 22

வன்னியிலிருந்து வெளியேறிய பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் வவுனியா அகதி முகாம்களில் சில ஆயுதக் குழுக்களால் சிறுவர்கள் கடத்தப்படுகின்றனர் என்று மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

அரசின் மறைமுக ஆதரவுடன் இது இடம்பெறுகிறது என்று மனித உரிமை அமைப்புகள் குறிப்பிடுகின்றன என ஏ.எவ்.பி., செய்தி வெளியிட்டுள்ளது.

சிறுவர் போராளிகளாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான கூட்டமைப்பு, வவுனியா நலன்புரி முகாம்களில் சிறுவர்கள் கடத்தப்படு கின்றமை குறித்து உறுதிப்படுத்தப் பட்ட அறிக்கைகள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்துள்ளது.

12 வயதான சிறுவர்கள் கூட கடத்தப்படுகின்றனர் என்று தெரிவித்துள்ள அந்த அமைப்பு, ஆயுதக் குழுக்களே இவற்றைச் செய்கின்றன எனவும் விடுதலைப் புலிகள் அமைப்பில் முன்னர் சிறுவர் போராளிகளாக இருந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரும் இனம் காணப்பட்டுக் கடத்தப்படுகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அரச படைகளினால் கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள இந்த முகாம்களுக்குள் எவ்வித தடையுமின்றி நடமாடுவதற்கு குறித்த ஆயுதக் குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் மற்றும் மன்னிப்புச் சபை என்பன அங்கம் வகிக்கும் இந்தக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டுகிறது.

அவர்களது இந்தச் செயற்பாட்டிற்கான நோக்கம் விளங்கவில்லை. சிலர் பணத்திற்காக கடத்தப்படுகின்றனர் என அந்த அமைப்பின் பேச்சாளர் சருலடா ஹொாக் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் முகாமிற்குள்ளேயே தாய்மார் நகைகளைக் கொடுத்து பிள்ளைகளை விடுவிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இந்தச் சிறுவர்கள் கொண்டு செல்லப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

# மனித உரிமைச் சட்டங்களுக்கு மதிப்பளித்து இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

நியூயோர்க்,மே 22

மனித உரிமைச் சட்டங்களுக்கு மதிப்பளிக்கக் கூடிய வகையில் இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டுமென நியூயோர்க்கை மையமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இடம்பெயர் பொதுமக்கள் மற்றும் கைது செய்யப்பட்டுள்ள போராளிகள் ஆகியோர் தொடர்பில் மனிதாபிமானத் துடன் அரசாங்கம் செயற்பட வேண்டு மெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கப் படையினர் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களைப் பின்பற்றுகின்றனரா என்பது குறித்து கவனிக்கப்பட வேண்டு மெனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்கள் களையப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அரசாங்கம் மன்னிப்பு வழங்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

80,000 சிறுவர்கள் உள்ளிட்ட 200,000 அப்பாவிப் பொதுமக்கள் அண்மைய யுத்த நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களுக்குத் தேவையான நிவாரணங்கள் வழங்கப்படுவதுடன் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியதும் இன்றியமையாததெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உள்ளிட்ட சகல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் மோதல் வலயங்களில் தடையின்றிப் பணிகளைத் தொடர அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டு மெனச் சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

இலங்கையின் யுத்த வலய நிலைவரங்கள் குறித்து கண்காணிப்பதற்கு தேசிய மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நாட்டின் சகல மக்களினதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (50)

# மூன்று தமிழ் வைத்தியர்களுக்கு எதிராக சுகாதார அமைச்சு விசாரணை நடத்தும்

கொழும்பு, மே 22

வடக்கில் போர் வலயத்தில் இருந்து தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு, போர் வலயத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துத் தகவல்களை வழங்கிய மூன்று தமிழ் வைத்தியர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


இவர்கள் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக பொய்யான தகவல்களை வழங்கியுள்ளதாகவும் அமைச்சின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்கமுத்து சத்தியமூர்த்தி, துரைராஜா வரதராஜா மற்றும் சண்முகராஜா ஆகியோருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தப்படும் எனவும் அவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

இவர்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து சென்ற போது கைது செய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன. எனினும் இந்த கைது குறித்து இதுவரை உத்தியோ பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (50)

# மறைந்த பத்மநாதன் எம்.பியின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம்

கொழும்பு, மே 22



காலஞ்சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதனின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தம்பிலுவில் பொது மயானத்தில் நடைபெறும்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு தமிழ்நாடு, மதுரையில் காலமான அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் கொழும்பை வந்தடையும் என்றும் அன்றைய தினம் இரவுவரை ஜயரத்ன மலர்ச்சாலையில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவிக்கின்றார்.

அங்கிருந்து இன்று இரவு நேரடியாக அம்பாறை மாவட்டத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படவுள்ளது. நாளை சனிக்கிழமை காலை முதல் நண்பகல் வரை அன்னாரின் தம்பிலுவில் இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்பட்டு பின்னர் அவரது சொந்த கிராமமான காரைதீவிற்கு பிற்பகலில் எடுத்துச்செல்லப்படும்.

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வரை காரைதீவு இல்லத்தில் அஞ்சலிக்காகப் பூதவுடல் வைக்கப்பட்டு பின்னர் மீண்டும் தம்பிலுவிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு மாலை வரை அங்கு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலையில் தகனக் கிரியைகள் நடைபெறும் என்றும் நாடாளுமன்ற உறுப்பி னர் பா.அரியநேந்திரன் மேலும் தெரிவித்தார். (50)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 09 | 23.05.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | மு.இ.8.29 வரை |
| நட்சத்திரம்: | பரணி |
| | மு.இ.08.34வரை |
| சுபநேரம்: | 2.52 - 04.22 |
| ராகுகாலம்: | 08.52 - 10.22 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பண்டத்தரிப்பு - காலையடி



## அருள்மிகு ஞானவேலாயுத சுவாமி தேவஸ்தானம்

## அழகிய திராவிட மரபு சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா



முருகப்பெருமான் மெய்யடியார்களே,

விரோதி வருடம் வைகாசித் திங்கள் 08 ஆம் நாள் (22.05.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு புதிதாக உருவாக்கப்பட்ட அழகிய சிற்பத் தேர் வெள்ளோட்டம் நடைபெறவுள் ளது. தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பும் நடைபெறும்.

எம்பெருமானின் சித்திரத்தேர் வடம்பிடித்து
ஆதிசிவன் புத்திரனின் அருள்பெற்றிட வாரீர்
வேல்கொண்டு வினை தீர்த்த வேலவனின்
அழகுத்தேர் இழுத்து வினைதீர்க்க வாரீர்

**ஆசியுரை:**
பிரம்மஸ்ரீ இ.உலகேஸ்வரக் குருக்கள்
(மஹோற்சவக்குரு)

**சிறப்புரை:**
விஸ்வப்பிரம்மஸ்ரீ இரத்தினம் அச்சுதபாகன்
(திருநெல்வேலி)

**புதிய சிற்பத்தேர் நிர்மாணிப்பு:**
மட்டுவில் மைந்தன் 'சிற்ப நுண்கலைச் செம்மல்'
விஸ்வப்பிரம்மஸ்ரீ கதிர்காமநாதன் கதிர்ரஞ்சன் (தவம்) குழுவினர்
(கோகிலா சிற்பாலயம், அம்மன் வீதி, பண்டத்தரிப்பு)

**வர்ண வேலை:**
திரு.செல்லையா செல்வதாஸ் குழுவினர் (ஸ்ரீ காமாட்சி அம்பாள் கலைக்கூடம், திருநெல்வேலி)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

ஆலய பரிபாலன சபை

---

தொழில்நுட்பவியல் கல்லூரியின்

# குடிசார் எந்திரவியல் பயிற்சிகள் இம்மாதம் 30 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 22

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் பயிற்சி நெறிகள் பிரிவினால் நாடத்தப்படும் குடிசார் ஏந்திரவியல் கணிய அளவியல் டிப்ளோமா பயிற்சி நெறிகள் இம் மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்ப மாக விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் மற்றும் இலத்திரனியல் டிப் ளோமா, சந்தைப்படுத்தலியலியல், உயர்தர டிப்ளோமா, கணக்கியல் உயர்தர டிப்ளோமா, வர்த்தகத்துறை ஆங்கிலத்தில் உயர்தர டிப்ளோமா, வாகன பொறியியல் தொழில் நுட்ப டிப்ளோமா, அலங்காரத்துறை டிப் ளோமா, (பரதநாட்டியம்) மனையியல் டிப் ளோமா, உயிரிதொழில் நுட்ப டிப்ளோமா, நுண்உயிரியல் உயர்தர டிப்ளோமா, கடல் சார் உயிரியல்வள தொழில் நுட்ப உயர்தர டிப்ளோமா போன்ற கற்கை நெறிகளுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்படுவதாக தொழில்நுட்பக் கல்வியியற் கல்லூரி அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் பின்வரும் கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அவ் அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மைக்ரோ சொப்ட் டிப்ளோமா, கணணி வன்பொருள் பொறியியல் சான்றிதழ் முன் பள்ளிக் கல்வி டிப்ளோமா, ஆங்கில மொழித் திறன் சான்றிதழ் சிங்களமொழிசான்றிதழ்.

இக்கற்கை நெறிகளில் இணைந்து கொள்ள விரும்பும். மாணவர்கள் தொழில்நுட்ப வியல் கல்லூரி அலுவலகத்தில் விண்ணப் பங்களைப் பெற்று பதிவு செய்து கொள்ளுமாறு கல்லூரி இணைப்பாளர் அறிவித்துள்ளார்.


### கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை ஞாயிறன்று

கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள இந்தப் பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பங்களை அனுப்பாதவர்களும் பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்ப தாரிகளை உரிய நேரத்திற்குள் பரீட்சை மண் டபத்திற்கு சமுகமளிக்கும்படி சங்கச் செய லாளர் ந.சுரேஸ்குமார் அறிவித்துள்ளார். (1-86)

---



அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் விரோதி வருஷ மஹோற்சவம் - 2009

மேற்படி ஆலய மஹோற்சவம் 28 மே 2009 அன்று ஆரம்பமாகி 08 ஜூன் 2009ல் பூர்த்தியாகும்.

**திருவிழா விஞ்ஞாபனம்**

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 28.05.2009 | வியாழன் | மு.ப. 10 மணி |
| சப்பறம் | 05.06.2009 | வெள்ளி | பி.ப. 5 மணி |
| தேர் | 06.06.2009 | சனி | மு.ப. 10.30 மணி |
| தீர்த்தம் | 07.06.2009 | ஞாயிறு | மு.ப. 10 மணி |
| பூங்காவனம் | 08.06.2009 | திங்கள் | பி.ப. 3 மணி |

மஹோற்சவக் கடைகளுக்குரிய நில ஒதுக்கீடு 24.05.2009 மு.ப. 10 மணிக்கு இடம்பெறும். ஐஸ்கிறீம், மிட்டாய், தேனீர்க் கடைகளுக்கு[illegible] சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கும்பழாவளை, அளவெட்டி. (சி/558651) தர்மகர்த்தாக்கள் சபை.

---

## திறந்த பல்கலைக்கழகத்தில் முன்பள்ளி கற்கைநெறி

யாழ்ப்பாணம் மே 22

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும் முன் பள்ளிக் கற்கை நெறிக்கான பாடசாலை நாள் வகுப்புக்கள் நாளை சனிக்கிமை மு.ப 9 மணிக்கு யாழ் பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் நடை பெறும் பட்ட மேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 2009/10 ஆம் கல்வி ஆண் டுக்கான புதிய அறிமுக விழா நாளை சனிக்கிழமை மு.ப 9 மணிக்கு நடைபெறவுள்ள தால் அனைத்து புதிய மாணவர்களையும் சமுகம் தருமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (1-7)

---

## துயர் பகிர்வு



18.05.2009 அன்று
வவுனியாவில் சிவபதம் அடைந்த
வேலணை ப.நோ.கூ. சங்கத்
தலைவரும், சட்டத்தரணியுமான

**சண்முகநாதன் நல்லைநாதன்**
அவர்கள்



புன்னகை பூத்த முகத்தழகு
நல் நாமத்துக்கேற்ற திகழ் அழகு
ஆறடிக்கு மேற்பட்ட ஆணழகு
ஆ[illegible]ரும் நேசா மனவழகு - உன்
கரங்கள் பட்ட கமம் அழகு
அதனால் பெற்ற பயன் அழகு
சட்டப் படிப்பில் பட்டம் அழகு
மக்களைக் கவரும் மாண்பு அழகு
கூட்டுறவுத் துறையில் தலைமை அழகு
காலனை கவர்ந்த உன் உயிர் அழகு
மனைவியுடன் வாழ்ந்த காலம் அது அழகு
மக்களைப் பெற்ற மாட்சி அழகு
எல்லாம் முடிந்த காலம் கொடிது
இறைவா நியதி இதுவா நியதி
எம்மைப் பிரிந்த செம்மல் அவர்க்கு
கண்ணீரித் துளிகளைக் காணிக்கையாக்கி
அஞ்சலி செலுத்தி அமைதியுடன் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வேலணை ப.நோ.கூ. சங்கம்,
வேலணை.

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இசையால் இணைவோம்' நிகழ்வின் மூலம் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுங்கள்

யாழ்ப்பாணம்,மே22

யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள 'இசையால் இணைவோம்' நிகழ்வில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு இயன்றளவு உதவிகளை வழங்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சமாதானத்திற்கும் நல்லிணத்துக்குமான பணியகம் இந்த அழைப்பினை விடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட எம் பிஞ்சு உள்ளங்களின் நலனுக்காக முற்றிலும் சிறுவர்களினால் மேடையேற்றப்படும் இந்நிகழ்வினைக் கண்டுகளிக்க அனைவரும் திரண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நலன் விரும்பிகள், பொது அமைப்புகள், சமய நிறுவனங்கள் தம்மாலான உதவிகளைப் பணமாகவோ அல்லது அவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவுகின்ற கற்றல் உபகரணங்களாகவோ வழங்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 12.30 மணிவரை 'இசையால் இணைவோம்' கரம்கொடுத்து உதவுவோம் நிகழ்வில் இந்த உதவிகளை வழங்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-9)

# இராமாவில் நலன்புரி நிலையத்தில் 670 குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன

## ஏனைய வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன

யாழ்ப்பாணம்,மே22

தென்மராட்சியில் கொடிகாமம், இராமாவில் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோருக்கான நலன்புரி நிலையத்தில் சுமார் 670 குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்த மக்களுக்குத் தேவையான சுகா தார வசதிகள், மின்சார விநியோக வசதிகள் என்பனவும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்குத் தேவையான குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க நீர் வழங்கல் வடிலாகமைப்புச்சபை துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

குடிதண்ணீருக்காக மீசாலை வேம்பிராய் பகுதியில் வற்றாத நன்னீர்க் கிணறு என அழைக்கப்பட்ட கிணற்றுக்கு அருகில் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நாளாந்தம் இக்கிணற்றில் இருந்து முகாமுக்குத் தேவையான குடிதண்ணீர் நீர்தாங்கிகள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை - தற்பொழுது இக்குழாய்க் கிணற்றில் இருந்து முகாமில் உள்ள தொட்டிகளில் நீரை நேரடியாக நிரப்பி மக்கள் பாவிக்கும் வகையில் வசதிகள் செய்யப்படவுள்ளன.

இதற்காக ஆரம்ப நடவடிக்கையாக கடந்த திங்கட்கிழமை குழாய்கள் நிலத்தில் புதைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (203-131)

# ஞாயிறுதோறும் வர்த்தக நிலையங்களை மூடுமாறு புலோலியில் அறிவுறுத்து

வடமராட்சி,மே22

புலோலிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் பிரதி ஞாயிறுதோறும் மூடப்படவேண்டும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

புலோலி வர்த்தக சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

உணவகங்கள், தொலைதொடர்பு நிலையங்கள், மருந்தகங்கள், சைக்கிள் திருத்தும் நிலையங்கள் தவிர்ந்த அனைத் துக் கடைகள், வர்த்தக நிலையங்கள் யாவும் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் மூடப் படவேண்டும் என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (203-236)

# சர்வதேச எயிட்ஸ் தினப்போட்டியில் வலிகாமம் வலயத்தில் 8 பேர் தெரிவாகினர்


பா.கெஸ்ரன்


நா.கஜந்தினி

சுன்னாகம்,மே22

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த எட்டு மாணவர்கள் மாகாண மட்டத்தில் தெரிவாகியுள்ளனர்.

கவிதைப் போட்டியில் மல்லாகம் மகாவித்தியாலய மாணவர்களான பா.கெஸ்ரன், நா.கஜந்தினி ஆகியோரும்-

சித்திரப் போட்டியில் இணுவில் இந்துக்கல்லூரி மாணவன் சி.பிரஞ்சீபனும், கட்டுரைப் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகளான கு.அழகுவதனா, கு.சிந்துஜா, மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன் மு.வினோத், வட்டு.இந்துக் கல்லூரி மாணவி வி.கௌசிகா, யூனியன் கல்லூரி மாணவி க.சிவகௌரிநாயகி ஆகியோரும் மாகாண மட்டத்தில் தெரிவாகியுள்ளனர்.

இவர்களது ஆக்கங்கள் தேசிய மட்டப் போட்டிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (203-38)

# "காந்தீயம்" இதழ் வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம்,மே22

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகாரபூர்வ வெளியீடான "காந்தீயம்" பத்திரிகையின் பெப்ரவரி - மார்ச் மாத இதழ் வெளிவந்துள்ளது.

வழமையான அம்சங்களுடன் இம்முறையும் "காந்தீயம்" வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# துறையாமூலை, சீலாப்புலம் கிராமங்கள் மீள் எழுச்சித் திட்டத்தின்கீழ் புனரமைப்பு

வடமராட்சி,மே22

மீள் எழுச்சித் திட்டத்தின்கீழ் பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள புலோலி துறையாமூலை, கெருடாவில் சீலாப்புலம் ஆகிய இரு கிராமங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

துறையாமூலை, சீலாப்புலம் கிராமங்களில் உட்கட்டுமான வேலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இதிலிருந்து பொருத்தமான அபிவிருத்தி வேலைகள் தெரிவுசெய்யப்படும் எனப் பிரதேச மதிப்பீட்டுக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறையாமூலை இலக்குக் கிராமத்தின் அபிவிருத்திக்கு 2 லட்சத்து 97 ஆயிரத்து 600 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து துறையாமூலை வீதியும் கிராமத்தின் இரு குடிதண்ணீர் கிணறுகளான அண்ணமார் வீதிக் கிணறு, துறையாமூலை வீதிக்கிணறு ஆகியவற்றையும் திருத்தம் செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கிராம மக்களால் முன்வைக்கப்பட்ட தேவைகள் எவை என்றும் அவற்றில் மீள் எழுச்சித்திட்டம் நிறைவேற்றுவது தவிர்ந்த ஏனைய அபிவிருத்தி வேலைகளை பிரதேச செயலகப் பிரதித் திட்டப் பணிப்பாளர் இணைப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சீலாப்புலம் இலக்குக் கிராமத்தில் முதலில் அங்குள்ள முன்பள்ளி புனரமைப்புச் செய்யப்படும். இப்புனரமைப்புப் பணியைக் கொம்மாந்துறை சனசமூக நிலையம் மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஏனைய அபிவிருத்திப் பணிகளை மீள் எழுச்சித் திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் இணைப்பார் என்று கூறப்பட்டது. (203-236)

# பருத்தித்துறை நகர அரசினர் மருந்தகத்தை முழுநேரமாக இயங்க வைக்க மக்கள் கோரிக்கை

வடமராட்சி,மே 22

பருத்தித்துறை நகர அரசினர் மத்திய மருந்தகம் கிழமை நாள்களில் முழுநேர வைத்திய சேவைகளை நோயாளர்களுக்கு வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்பனை வீதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் இயங்கிவரும் இம்மத்திய மருந்தகத்தில் சிகிச்சை பெறுவதற்கு நாளாந்தம் 250 நோயாளர்கள் வந்து செல்கின்றனர்.

வாரத்தில் திங்கட்கிழமைகளில் மாத்திரமே முற்பகலிலும், பிற்பகலிலுமாக முழுநேரமாக மத்திய மருந்தகம் செயற்பட்டு வருகிறது.

செவ்வாய் முதல் வெள்ளி வரை யான நாள்களில் பிற்பகலில் மாத்திரமே செயற்பட்டு வருகிறது. சனிக்கிழமைகளில் முற்றாக இயங்குவதில்லை.

செவ்வாய்க்கிழமை தொடக்கம் சனி வரை முற்பகல் வேளைகளில் பருத்தித்துறை நகருக்கு வெளியே உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைகளை வழங்குவதற்கு இங்கு கடமை புரியும் வைத்தி அதிகாரி செல்வதனால் குறிப்பிட்ட தினங்களில் முற்பகல் வேளைகளில் வைத்திய சிகிச்சைகள் எதுவும் நடைபெறுவதில்லை.

சனிக்கிழமை அரைநேரமாதலால் அன்றைய தினமும் பிற்பகலில் மத்திய மருந்தகம் இயங்குவதில்லை.

முன்னர் சனிக்கிழமைகளில் இம்மருந்தகத்தில் குடும்பநலம், நீரிழிவு போன்ற கிளினிக்குகள் இடம்பெற்று வந்தன.

சனிக்கிழமைகளில் மருந்தகம் செயல்படாமையினால் இக்கிளினிக் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே வாரத்தில் மூன்று தினங்களாவது இம்மத்திய மருந்தகத்தை முழுநாள்களும் இயங்க வைக்க வேண்டுமென நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (203-236)

# யாழ்.வலய ஆசிரியருக்கு மே மாதக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,மே22

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான இந்த மாதக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேற்படி ஆசிரியர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் சம்பளப் பட்டியிலில் கையொப்பமிடுமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (204)

# வரணி பிரதேச வைத்தியசாலையில் மீண்டும் மகப்பேற்று விடுதி

யாழ்ப்பாணம்,மே 22

தென்மராட்சி கிழக்கு, வரணிப் பகுதியில் அமைந்திருக்கும் பிரதேச வைத்தியசாலையில் நீண்டநாள்களாக இயங்காது காணப்பட்ட மகப்பேற்று விடுதி மீளவும் சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பினால் புனரமைக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வு வரணிப் பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.நடராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை யாழ். அரச அதிபர் க.கணேஷ், சர்வதேச மருத்துவ சுகாதார கழகத்தைச் (அமெரிக்கா) சேர்ந்த டாக்டர் என்.சிவராசா, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.கேதீஸ்வரன், சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சிவலிங்கம், சுகாதாரத் திணைக்களத் திட்டமிடல் பிரிவைச் சேர்ந்த டாக்டர் கே.நந்தகுமார், வரணி வைத்தியசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர் எஸ்.நவரத்தினசாமி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

மகப்பேற்று நிலையத்தை அரச அதிபர் கே.கணேஷ் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

இந்த மகப்பேற்று நிலையம் சர்வதேச மருத்துவ சுகாதாரக் கழகத்தினால் 5 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

இந்நிலையத்தில் சாவகச்சேரி, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைகளில் பிரசவித்த 3 தாயும் பிள்ளைகளும் சம்பிர தாயபூர்வமாக அன்றையதினம் தங்க வைக்கப்பட்டனர். (203-131)

# கட்டுரைப் போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,மே22

யாழ்.வலயப் பாடசாலை மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை நடத்தப்படவிருந்த சமூக நல்லிணக்க தினக் கட்டுரைப் போட்டி தவிர்க்க்முடியாத காரணத்தால் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203)



கோப்பாய் தென்கோவை வீரமாகாளி அம்பாள் ஆலயச் சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நேற்று இடம்பெற்றது.

புதிய சித்திரத் தேருக்கான கலசம் வீதியுலாவாக எடுத்துச் செல்லப்படுவதை முதலாவது படத்திலும் தேரை உருவாக்கிய சிற்பாசாரியார் நடராஜா சற்குருநாதன் அபிஷேகம் செய்வதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். தேரின் உச்சியில் கலசம் வைக்கப்படுவதையும் தேர் வெள்ளோட்டம் இடம் பெறுவதையும் அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் கொல்லப்பட்டோர் தொகையை குறைத்துக் காட்ட இலங்கை இராணுவம் சதி

## ஒரு லட்சத்து 20 ஆயிரம் தமிழர் பலியாகினர் என்கிறார் வைகோ

கோவை, மே 22

இலங்கையில் இராணுவத் தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து காட்டுவதற்காக உடல்களை இராணுவத்தினர் எரித்து வருகின்றனர் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் செவ்வாயன்று அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

முல்லைத்தீவில் 3.5 லட்சம் தமிழர்கள் எவ்வித அடிப்படை வசதியும் இல்லாமல் மரணத்தின் பிடியில் சிக்கியிருக்கின்றனர் என கடந்த ஜனவரியில் இருந்து நாம் கூறிவருகிறோம்.



ஆனால், இலங்கை அரசும், மத்திய அரசும் 70 ஆயிரம் பேர்தான் இருக்கின்றனர் எனக் கூறின. இப்போது ஒரு லட்சத்து 20 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐ.நா.வின் ஆய்வுக் குழு அப்பகுதிகளைப் பார்வையிடச் செல்கிறது என்பதால், இறந்தவர்களின் உடல்களை இலங்கை இராணுவத்தினர் பெற்றோல் ஊற்றி எரித்து சாம்பலை கடலில் கரைத்து விட்டனர்.

இறந்தவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து காட்டுவதற்காக இலங்கை இராணுவம் திட்டமிட்டு இச்செயலைச் செய் துள்ளது.

பிரபாகரன் அம்புலன்ஸில் தப்பிச் சென்றபோது சுட்டுக் கொன்றார் எனக் கூறுவது, அவரை இழிவுபடுத்தும் செயலாகும். பிரபாகரன் உயிரோடு, நலமுடன் பாதுகாப்பான இடத்தில் இருக்கிறார். தொலைக்காட்சியில் காட்டப்படும் படங்கள் உறுதிப்படுத்தும் வகையில் இல்லை.

இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற பல்வேறு நாடுகளிடம் பயங்கர ஆயுதங் களை வாங்கிய இலங்கை, அவர்கள் மீது தாக்குதலை நடத்தியிருக்கிறது. புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டமைக்கு இந்தியக் கடற்படையின் உதவியே காரணம் - என்றார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இறந்துவிட்டார் என வரும் செய்திகளை நம்பி யாரும் தீக் குளிக்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரபாகரன் இறந்தார் என வந்த செய்தியைக் கேட்டு கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி ஒன்றிய ம.தி.மு.க. அவைத் தலைவர் பிரகாசம் தீக்குளித்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் வைகோ செவ்வாய்க்கிழமை விடுத்த பேட்டியில் கூறியுள்ளார். (சி)


நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 31 ✱ 03 ✱ 1936



மறைவு 22 ✱ 04 ✱ 2009

அமரர் நாகரத்தினம் வேலுப்பிள்ளை

கடந்த 22.04.2009 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி, மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு எம்முடன் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (22.05.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பேத்தி அம்மன் கோயிலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (85448)

V.நாதன் குடும்பத்தினர்.


## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு மே 22

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினால் டாக்டர் டபிள்யூ.ஆர்.கோமஸ் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே லீக் முறையில் நடத்தப்பட்டுவரும் ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங் கள் வருமாறு:-

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் (ஆண்கள்)**

✱ யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி எதிர் யாழ்.இந்துக் கல்லூரி.

✱ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம் (பெண்கள்)**

✱ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக்கல்லூரி

**வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானம்**

✱ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.

(203-86)


மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 28 வயதுடைய (8 இல் செவ்வாய்) பகுதிநேர கணனி விரிவுரையாளரும், அரச துறையில் முகாமைத்துவ உதவியாளராகவும் (Management Assistant) பதவி வகிக்கும் மணமகனிற்கு அழகிய குடும்பப்பாங்கான கிரகபாவம் குறைந்த அரசதொழில் செய்யும் அல்லது உயர் கல்வி கற்ற மணமகள் தேவை.

விரும்புபவர்கள் பெண்ணின் சாதகம்,குடும்ப விவரம், புகைப்படம், தகைமை உட்பட பூரண விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை கண்ணியமாகத் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

விளம்பர இல: 3901
மே/பா: உதயன். (85440)


## ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜிமகராஜ் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம்,மே22

கொழும்பு இராமகிருஷ்ண மிசன் உப தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜி மகராஜ் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

தாவடியில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி நிலையத்தில் ஒருவாரம் தங்கவுள்ள சுவாமி இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபடுவார்.

சுவாமியின் அருளாசி பெற விரும்புகின்ற அடியவர்கள் மானிப்பாய் வீதி, தாவடியில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்.வருகை தரவிருந்த ஸ்ரீமத் சர்வரூபானந்தஜிமகராஜ் சுவாமிகள் பயண அனுமதி கிடைப்பதில் ஏற்பட்ட கால தாமதம் காரணமாக பயணம் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9)

## கழிவுநீர் தேங்குவதால் துர்நாற்றம்

வண்ணை,மே22

குருநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்படாமையால் கழிவு நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசி வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி ஓரங்களில் உள்ள குப்பை, கூழங்களை அகற்றாமையாலும் அப்பகுதியால் செல் லும் மக்கள் அசௌகரியங்களை எதிர் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உரியவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (204-160)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 14 ✱ 05 ✱ 1957



மறைவு 22 ✱ 04 ✱ 2009

யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி சித்திரகௌரி கோபாலகிருஷ்ணன்
(ஆசிரியை, வரணி பாலர் பாடசாலை, மீசாலை)

கோபாலகிருஷ்ணன் (இளைப்பாறிய முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் நிஷாந்தன், தர்சிகா, சுகந்தன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற டாக்டர் அரியரட்ணம் - வள்ளியம்மா தம்பதியரதும் காலஞ்சென்ற வாரித்தம்பி- ஞானகலாவல்லி தம்பதியினரதும் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளுமாவார். எமது அன்புத் தெய்வம் அமரத்துவம் அடைந்தமையை அறிந்து நேரடியாக வந்து எமக்கு ஆறுதல் கூறி துயரம் பகிர்ந்தோர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பல்வேறு வகையில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.05.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் பங்குகொண்டு அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

"பரணி",
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

கணவர், [illegible]

மரண அறிவித்தல்

திருமதி இராஜேஸ்வரி இந்திரன்



தாவடியைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரி இந்திரன் நேற்று (21.05.2009) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் கோப்பாயைச் சேர்ந்த இராசையா இந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையா - தங்கம்மா தம்பதியினரின் மூத்த மருமகளும் அன்னலட்சுமி, சரஸ்வதி, கமலேஸ்வரி, பரமேஸ்வரி, செல்வரத்தினம், ஆனந்தகிருஷ்ணன், தருமராசா, தவமலர், செல்வராஜா, காலஞ்சென்ற சச்சிதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தம்பிராசா, இராஜரட்ணம் காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் மற்றும் சண்முகரத்தினம், சீவரத்தினம், சொர்ணகாந்தி, சரோஜாதேவி, பங்கையற்செல்வி, ராஜேஸ்வரி, கோப்பாயைச் சேர்ந்த கருணேந்திரன், மனோரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
தாவடிப்பிள்ளையார் கோயிலடி,
தாவடி.

தகவல்:
இ.இந்திரன் (கணவர்),
சகோதரர்கள், சகோதரிகள். (C/558663)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 ✱ 10 ✱ 1950



இறப்பு 25 ✱ 05 ✱ 2006

திருமதி இராசலிங்கம் இராசாத்தி

திதி: திரயோதசி (22.05.2009)

களிவோடு எமைக் காத்த காலத்தை - எண்ணி
கழிக்கின்றோம் எந்நாளும்
இனிவரும் காலங்களும் நெஞ்சில் இருந்து
இனித்திடுமே உம் நினைவு.

பத்திரகாளி கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

இ.கமலஹாசன் (பிரான்ஸ் - மகன்),
குடும்பத்தினர். (85444)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 வயதுப் பிரிவுக்கான கிரிக்கெட் ஆட்டமொன்றில் யாழ்.இந்துவை வீழ்த்தியது சென்.பற்றிக்ஸ் அணி

## சஞ்சீவராஜ், ஜெபர்சன், கிளின்ரன் அரைச்சதம் கடந்தனர்

வலி.வடக்கு,மே22

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணம் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தி வரும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய 17 வயதுப் பிரிவினர்களுக்கான கிரிக்கெட் போட்டியின் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 170 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 49.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சஞ்சீவராஜ் 66 ஓட்டங்களையும், ஜெபர்சன் 56 ஓட்டங்களையும், கவாஸ்கர் 33 ஓட்டங்களையும், கிளின்ரன் 54 ஓட்டங்களையும், கோகுலன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பில் செந்தூரன் 7.4 ஓவர்கள் பந்துவீசி 47 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், பார்த்தீபன் 10 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், அமலராஜ், நிலாஜனன், வினுஜன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

282 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 37.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 111 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

செந்தூரன் 24 ஓட்டங்களையும், கிரிசோபன் 20 ஓட்டங்களையும், பார்த்தீபன் 15 ஓட்டங்களையும், டிலக்சன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் ஜஸ்ரின் 9.4 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், சஞ்சீவராஜ் 6 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், ஜெபர்சன் 7 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், கவாஸ்கர் 3 ஓவர்கள் பந்துவீசி 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

# சாதனை படைத்த 12 வயது மாணவி

ஊர்காவற்றுறை,மே22

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டியில் 10ஆயிரம் மீற்றர், 5ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலாம் இடங்களையும் ஆயிரத்து 500 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளார் 12 வயது மாணவியாகிய இ.கிருஷா.

இவர் கரம்பொன் ஞானஒளி விளையாட்டுக்கழகம் சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றினார். (50-325)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# துடுப்பாட்டம், பந்துவீச்சு இரண்டிலும் அசத்தி வெற்றிவாகை சூடியது நெல்லியடி ம.ம.வி.

நெல்லியடி,மே22

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் 17 வயதுப் பிரிவினருக்கிடையே நடத்திவரும் கிரிக்கெட் போட்டித் தொடர் ஆட்டமொன்றில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் வெற்றிபெற்றுள்ளது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் சார்பில் த.அமிர்தன் 70 ஓட்டங்களையும், ந.டினாளன் 48 ஓட்டங்களையும், அ.நிரோஜன் 45 ஓட்டங்களையும், ந.பிரியதர்சன் 45 ஓட்டங்களையும், அ.அரிஹரன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களின் அதிரடியான துடுப்பாட்டத்தின் துணையோடு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 321 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சார்பில் குகன்ஜன், பஜிதரன் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

322 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீரர் ஜெ.உமைசுதனின் துல்லியமான பந்துவீச்சுக்கு முகம் கொடுக்கமுடியாது 26.5 ஓவர்களில் 113 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து தோல்வியைத் தழுவிக்கொண்டது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சார்பில் ந.திருமாறன் 32 ஓட்டங்களையும், க.பிரதீபன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் உமைசுதன் 13 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

முடிவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் 208 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (50)

# 3 கராத்தேயும் பௌதிகவியலும்

அடுத்து உதை அல்லது குத்தும்போது எதிரியின் மூட்டு போன்ற இடங்களில் பலத்த சேதத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால், எதிரி எம்மை நோக்கி அசையும் நேரத்தை அவதானித்து அந்த நேரத்தில் நாம் விரைவாகத் தாக்கும்போது உந்த மாற்றம் Change of Momentum அதிகரிக்கும். எனவே Rate Change of Momentum அதிகரிக்கும். எனவே விசை கூடும்.

Momentum → ← Momentum

$P_1$ $P_2$

$$\text{Change of Momentum} = (P_1+P_2)$$

$$\text{Force} = \frac{(P_1+P_2)}{t}$$

இவ்வாறு ஒவ்வொன்றாக அதிகமான எல்லா நுட்பங்களுக்கும் பின்னர் பௌதீகவியல் நிற்கும். ஆனாலும் ஆசிரியர் கபிறியல் நேமன் சில நுட்பங்களைச் செய்வார். அவற்றைப் பௌதிகவியலால் விளங்க முடியாது. அத்துடன் வெளிநாடுகளில் சில இடங்களில் உள்ள கராத்தே பயிற்றுவிப்பாளர்கள் செய்கின்ற உயர் நுட்பங்கள்

அ.அவபாயன்,
1st Dan (AOMA)
4ஆம் வருட பௌதிகவியல்துறை மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

உதாரணமாகத் தொடுகை இல்லாமல் இருக்கும். இருவரில் ஒருவருக்கு அடிக்கும் உதை மற்றவரை இறப்பிற்குத் தள்ளிவிடுமளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது இது என்ன? இது Meta Physics இல் அடக்கப்படுகின்றது. எனவே இவை ஆராயப்பட வேண்டியவை ஆகும்.

*(வளரும்)*

# ஆண்களுக்கான கபடிப் போட்டி நாளை

வலி.வடக்கு,மே22

யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திவரும் குழுநிலை விளையாட்டுப் போட்டித் தொடரில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆண்களுக்கான கபடிப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* தெல்லிப்பழை பிரதேச செயலகம் எதிர் கோப்பாய் பிரதேச செயலகம்.
* சாவகச்சேரி பிரதேச செயலகம் எதிர் நல்லூர் பிரதேச செயலகம்.
* கரவெட்டி பிரதேச செயலகம் எதிர் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு.
* சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் எதிர் உடுவில் பிரதேச செயலகம்.
* யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் எதிர் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு.
* காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு எதிர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு.
* வேலணை பிரதேச செயலகம் எதிர் சங்கானை பிரதேச செயலகம்.

இரண்டாவது சுற்றில் இருந்து பருத்தித்துறை பிரதேச செயலகம் போட்டிகளில் விளையாடும். (50-86)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளின் முடிவுகளில் சில

வலி.வடக்கு,மே22

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 17 வயதுப் பெண்களுக்கான தடகளப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோரின் விவரம் வருமாறு:

**100 மீற்றர் ஓட்டம்**

சி.சோபிகா (கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி.), ம.விதுஸ்கா (மீசாலை வீரசிங்கம் வித்தி.), உ.துஷ்யந்தினி (நவாலி மகா வித்தி).

**200 மீற்றர் ஓட்டம்**

இ.யக்சனா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), க.வண்ணமதி (கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை), சி.கஜானா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

**400 மீற்றர் ஓட்டம்**

அ.சுகன்யா (இளவாலை கன்னியர் மடம்), கு.சாரண்யா (வல்லை சிவகுரு வித்தி.), சி.சோபிகா (கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி).

**800 மீற்றர் ஓட்டம்**

ச.கஜானா (மூளாய் சைவப்பிரகாச வித்தி.), இ.சித்ரா (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), ப.கலைரூபி (காரைநகர் கலாநிதி தியாகர்ராஜா மகாவித்தி).

**1500 மீற்றர் ஓட்டம்**

ச.கஜானா (மூளாய் சைவப்பிரகாச வித்தி), இ.சித்ரா (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), கு.ஜனுஜா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி).

**110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம்**

இ.மேரிசூசையம்மா (இளவாலை கன்னியர்மடம் பாடசாலை), சி.பத்மசந்தியா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), த.மதுரா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**400 மீற்றர் தடைதாண்டல்**

சி.மேரிலேனினா (யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை), ச.தர்ஜினி (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ஜீ.துஷயந்தினி (யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை).

**நீளம் பாய்தல்**

செ.மேரிலேனினா (யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை), இ.கார்த்திகா (சங்கானை சிவப்பிரகாசம் வித்தி), த.தர்மினி (நவாலி மகாவித்தி).

**உயரம் பாய்தல்**

ச.கிசாந்தினி (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), கு.அபர்ணா (வட கம்பர்மலை அ.த.க.), ஜீ.மயூரணா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

**முப்பாய்ச்சல்**

இ.யக்சனா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), சி.ஜெயரஞ்சினி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), றெ.ஸ்ரெபிகிறாப் (யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை).

**குண்டு போடுதல்**

சி.ஜனார்த்தனி (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), சி.கீர்த்திகா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), க.திவ்வியா (ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தி).

**தட்டெறிதல்**

கு.சகனா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), ந.நிமலினி (மீசாலை வீரசிங்கம் வித்தி), ச.ஞானகி (வட.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**ஈட்டி எறிதல்**

ச.ஞானகி (வட.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சி.டென்சிகா (வட்டு. மத்திய கல்லூரி, சி.சதுர்யா (வட. அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலை).

**கோலூன்றிப் பாய்தல்**

இ.ஜக்சனா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி).

**4 x 100 மீற்றர் அஞ்சலோட்டம்**

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**4 x 400 மீற்றர் அஞ்சலோட்டம்**

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை, ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம். (50-86)

*(வளரும்)*



தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது. இறுதிப்போட்டியில் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகமும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் விநாயகர் ஆலய தேர்த்திருவிழாவின் போது விநாயகப் பெருமான் பச்சை உடுத்தி இளைப்பாற்று மண்டபம் செல்லும்போது எடுக்கப்பட்ட படம்.

(59)



திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமிகள் கோயில் கைலாச வாகன உற்சவத்தின்போது எடுத்த படங்கள்.

*(படம்: லக்ஸ்மன்)*



அல்லாரை அறுகம்புலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது.

வீதியுலா வந்த கும்பங்களுக்கு கிரியா கலாமணி சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக் குருக்கள் தலைமையிலான குருமார் உரிய கிரியைகள் மேற்கொள்வதைப் படத்தில் காணலாம்.

(207)



காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற தேர்த் திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படம்.

அம்பாள் பக்தர்கள் புடைசூழ தேரில் திருவீதி உலா வருவதைப் படத்தில் காணலாம்.

(207)

# இனங்களிடையே நல்லிணக்கம் வலியுறுத்துகின்றது அமெரிக்கா

கொழும்பு, மே 22

ஜனநாயகம், சகிப்புத்தன்மை மிக்க ஐக்கிய இலங்கையை உருவாக்கவேண்டும். இரு சமூகங்கள் மத்தியிலும் நல்லிணக்கம் மற்றும் நீதியை ஏற்படுத்த வேண்டும் என அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகார பிரதிப் பேச்சாளர் இயன்கெலி தாம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அனைத்து இலங்கையரினதும் பாதுகாப்பையும், உரிமையையும் உறுதிப்படுத்தும் புதிய அதிகாரப்பகிர்வுக்காக அனைத்து இலங்கையர்களும் சேர்ந்து முயலவேண்டும். இதன்மூலமே நிரந்தர சமாதானம் சாத்தியம் என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் நீண்டகால மோதல் முடிவுக்கு வந்துள்ளமை மற்றும் இராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளமையை அமெரிக்கா வரவேற்கின்றது.

26 வருட மோதல் பல ஆயிரக்கணக்கான சிங்களவர்கள், தமிழர்களின் உயிர்களைப் பலியெடுத்துள்ளது. பெருமளவு இலங்கையர்களைத் தமது வீடுகளிலிருந்து வெளியேறச் செய்துள்ளது. பெருமளவிலானவர்களை அங்கவீனர் களாக்கியுள்ளதுடன் நாட்டை மோசமாகப் பிளவுபடுத்தியுள்ளது.

சமீபத்தைய மோதல் காரணமாக இடம்பெயர்ந்த பல ஆயிரக்கணக்கானவர்களின் நலன் குறித்து அமெரிக்கா தொடர்ந்தும் ஆழந்த கவலை கொண்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக இலங்கையின் வடபகுதியில் தமிழர்கள் எதிர்கொண்ட துயரங்கள், இழப்புகளை நாங்கள் உணர்ந்துள்ளோம்.

உயிரிழப்புகள் முடிவுக்கு வந்துள்ளமை பற்றி ஆறுதலடைந்துள்ளோம்.

மனிதாபிமான உதவிகள் முகாம்களுக்குச் சென்றடைவதற்கு அனுமதிக்குமாறும் மனிதாபிமான அமைப்புகளுடன் இணைந்து செயற்படுமாறும் அரசிடம் கேட்டுக்கொள்கிறோம்.

இடம்பெயர்ந்தவர்களுக்கு உரித்தான உரிமைகள் வழங்கப்படவேண்டும்.

அனைத்துப் பிரஜைகளினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசுடன் இணைந்து செயற்படத் தயாராகவுள்ளோம் என்று தெரிவித்தார்.

(சி)

# பயங்கரவாத ஒழிப்பில் இலங்கையை எந்த நாட்டுடனும் ஒப்பிட முடியாதாம்

## பிரியதர்ஷன யாப்பா கூறுகிறார்

கொழும்பு, மே 22

மூன்று தசாப்தங்களாக நிலவிய பயங்கரவாதத்தை உலகின் எந்த நாட்டுடனும் ஒப்பிட முடியாதளவுக்கு இலங்கை அரசு இரண்டரை வருடங்களில் முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது எனத் தகவல் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அமைச்சர் இங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கொல்லப்படவில்லை. அவர் உயிருடன் இருக்கிறார் என சில சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளபோதிலும் அவரது கதை முடிந்து விட்டது. அவரது அமைப்பும் அடியோடு அழிக்கப்பட்டுள்ளது.

தமிழக மக்களும் பிரபாகரனை நிராகரித்து விட்டனர் என்பதை இந்தியாவின் தேர்தல் முடிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன - என்றார்.

(சி)

# அன்பே வடிவான இறைவனைத் தெரிதல்

## ஞானக்கதிர்

உடம்பை வளர்த்திட உபாயம் அறிகின்றோம். உயிரைக் காத்திட உபாயம் அறிகின்றோம். உடம்பினுள் உயிருடன் சேர்ந்திருக்கும் உத்தமனை - ஈசனை - இறைவனை அறிய உபாயம் தேடாமல் அலைகின்றோம். இவ்வுடம்பினுள்ளேயே உயிருடன் உயிராய் இறைவன் இருப்பதை உணர்கின்றோம். இதனை விளக்குகிறது ஒரு சிறு கதை.

சுப்பன் நித்திரைவிட்டெழுந்து கிணற்றடிக்கு வந்தான். ''ஐயையோ அப்பு கிணற்றுக்குள் வீழ்ந்துவிட்டார். எல்லோரும் ஓடி வாருங்கோ, பாருங்கோ'' என்று உரக்கக் கத்தினான். சுப்பனின் கூக்குரலைக் கேட்ட அயலவர்கள் துடித்துப் பதைத்துக்கொண்டு ஓடி வந்தார்கள். ''அப்பு கிணற்றுக்குள் வீழ்ந்து மேலே வருகிறார்'' என மறுபடியும் கத்தினான். அயலவர்கள் கிணற்றண்டை வந்து சூழ்ந்ததும் கிணற்றை எட்டிப் பார்த்தார்கள். சுப்பனைப் பார்த்து, ''ஏது கூக்குரலிடுகிறாய். உங்கள் அப்புவைக் கிணற்றுக்குள்ளே காணோமே'' என்றனர். சுப்பன் மறுபடியும் ''ஐயோ அப்பு கிணற்றுக்குள் விழுகின்றார் எனக் கூறி அதோ கரை புரண்டு ஓடி வருகின்ற அப்புவும் கிணற்றுக்குள்ளேயே விழ ஓடி வருகின்றார் எனக் கத்தினான். பின்பு அப்புவும் கிணறும் கலந்து வெளியே கரைபுரண்டு ஓடுவதைச் சுட்டிக் காட்டினான். அயலர்களுக்கு அப்போது தான் சுப்பன் கூறிய மர்மம் துலங்கிற்று. மழை வெள்ளம் கிணற்றினுள் வீழ்ந்து கிணற்று நீரோடு கலந்து கிணறு நிறைந்து வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்ற காட்சியை சுப்பன் அழகாக விளக்கினான். அயலவர்களும் தெளிந்து கொண்டனர்.

''அப்பினிக் கூர்மை ஆதித்தன் வெம்மையால், உப்பெனப் பேர் பெற்று உருச் செய்தது. அவ்வுரு அப்பினிற் கூடியதொன்றாக மாறுபோற் செப்பனிற் ஜீவன் சிவத்துள் அடங்குமே.'' அப்பு எனப்படுவது நீர் - திரவப் பொருள். இங்கே கடல் நீரைக் குறிக்கின்றது. ஆதித்தனின் சூரியனின் கூர்மையான வெப்பத்தால் கடல்நீர் உப்பாக மாறுகின்றது. உப்பு ஒரு திடப் பொருள். கரையும் தன்மையானது. கடல் நீரானது சூரிய வெப்பத்தால் காய்ச்சப்பட உப்பு உருவாகிறது. பின்னர் அந்த உப்பு நீருடன் சேர உப்புக் கரைந்து மறுபடியும் உப்பு நீராகி விடுகின்றது. இதேபோன்றதே ஜீவன் சிவத்துள் அடங்கியிருக்கும் பான்மையாகும்.

உடம்போடு உயிர் இருக்கும் காலத்தே இறை சிந்தனையின்றிச் செய்யத் தகாத - கூடாத - இழிவான செயல்களைச் செய்கின்றோம். துயருறுகின்றோம். நரகத்தை நோக்குகின்றோம். கடவுள் - இறைவன் இவ்வுடம்பெனும் பெருங்கோயிலை தானும் இருப்பதற்காகவே கட்டினான். ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று சேர்ந்து வாழ்வதற்காகவே இவ்வுடம்பு படைக்கப்பட்டது. இவ்வுடம்பு அழியும் தன்மையது. உயிர் அழியாது. பரமாத்மாவும் ஜீவாத்மாவும் என்றும் அழியாதவை. அநாதியானவை. உடம்பு அழியும்போது அதனுள்ளிருந்த ஜீவாத்மாவும் பரமாத்மாவும் குடம்பை தனித்தொழியப் புட்பறந்தவாறே வெளியேறி விடுகின்றன. உடம்பினுள்-உடம்புடன் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று சேர்ந்து இருக்கும் போதுதான் நாம் உண்மையை அறியலாம். தெளிவு நிலையை அடையலாம். பரம் பொருளை எமது அயராத முயற்சியினால் நேரடியாகத் தரிசிக்கலாம். இறைவன் நேரே காண்கின்ற நிலையை அடையலாம். மெய்ஞானத்தை உணரலாம். பெறலாம் - அடையலாம்.

-ஏழுமலைக் குமரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- '' அன்பினால் உலகையே வெல்ல முடியும் ''

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

**BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA (Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)**

உச்சரிப்பு சரியாக அமைவதற்கு சொற்களின் உச்சரிப்பை பிரிப்பதை (Syllable) என அழைப்பர். அதற்கிணங்க முக்கியமான சொற் களை கீழே காணலாம். இவை Day to Day Conversation நாளாந்த பாவனை வாக்கியங்களில் வரும். இவற்றைப் பலமுறை படித்து பழக்கப் படுத்திக்கொள்ளவும்.

**15.05.2009 Continuity.....**

| | சொற்கள் | பிரிப்பு | உச்சரிப்பு | கருத்து |
|---|---|---|---|---|
| 334. | Interest | In - ter - est | இன்றறிஸ்ட் | தெரிந்துகொள்ள விருப்பம் |
| 335. | Interfere | In - ter - fere | இன்ரபியர் | குறுக்கீடு |
| 336. | Interference | In - ter - fer - enc | இன்ரபிரன்ஸ் | குறுக்கிடுதல் |
| 337. | Introduction | In - tro - duc - tion | இன்ட்றடக்ஷன் | அறிமுகப்படுத்தல் |
| 338. | Invaluable | In - val - u - a - ble | இன்வல்யுஎபிள் | விலைமதிப்பற்ற |
| 339. | Investigate | In - ves - ti - gate | இன்வஸ்டிகேட் | விசாரணைசெய் |
| 340. | Investment | In - vest - ment | இன்வெஸ்ட்மெண்ட் | முதலீடு |
| 341. | Invincible | In - vin - ci - ble | இன்வின்சபிள் | வெற்றிகொள்ள முடியாத |
| 342. | Invisible | In - vis - i - ble | இன்விசிபிள் | கண்ணுக்கு புலனாகாத |
| 343. | Invitation | In - vi - ta - tion | இன்விட்டேசன் | அழைப்பு |
| 344. | Invocation | In - vo - ca - tion | இன்வொகேஷன் | உதவிவேண்டுதல் |
| 345. | Involuntary | In - vol - un - tary | இன்வொலன்ரறி | தானாக இயங்கக்கூடிய |
| 346. | Inwardness | In - ward - ness | இன்வேட்னிஸ் | உள்ளியல்புநிலை |
| 347. | Irradiate | Ir - ra - di - ate | இறாடியேற் | ஒளிவீசு |
| 348. | Irrational | Ir - ra - tion - al | இறாஷனல் | பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட |
| 349. | Irrecoverable | Ir - re - cov - era - ble | இரிகுவெரெபிள் | திரும்ப பெறமுடியாத |
| 350. | Irredeemable | Ir - re - deem - a - ble | இரிடிமெபிள் | மீட்க முடியாத |
| 351. | Irregular | Ir - reg - u - lar | இரெகுலர் | ஒழுங்கற்ற |
| 352. | Irrelevant | Ir - rel - e - vant | இரெலவண்ட் | பொருத்தமற்ற |
| 353. | Irreligious | Ir - re - li - gious | இரெலிஜஸ் | சமயப்பற்றில்லாத |
| 354. | Irremovable | Ir - re - mo - va - ble | இரிமூவெபிள் | அகற்ற முடியாத |
| 355. | Irreplaceable | Ir - re - place - a - ble | இரிபிளேசபிள் | ஈடுசெய்ய முடியாத |
| 356. | Irresponsible | Ir - re - spon - si - ble | இரிஸ்பொன்சபிள் | பொறுப்பற்ற |
| 357. | Jackass | Jack - ass | ஜக் அஸ் | ஆண் கழுதை |
| 358. | Jacket | Jack - et | ஜக்கிற் | மேலுடை |
| 359. | Jackfruit | Jack - fruit | ஜக்புருட் | பலாப்பழம் |
| 360. | Jackpot | Jack - pot | ஜக்பொட் | பெரிய பரிசு |
| 361. | Jaggery | Jag - ger - y | ஜக்கறி | சர்க்கரை, வெல்லம் |
| 362. | Jailer | Jail - er | ஜெயிலர் | சிறைக்காவலர் |
| 363. | January | Jan - u - ary | ஜனூஅரி | தைமாதம் |
| 364. | Japanese | Jap - a - nese | ஜப்பனீஸ் | ஜப்பான் நாட்டைச் சேர்ந்த |
| 365. | Jargon | Jar - gon | ஜார்கன் | பொருளற்ற பேச்சு |
| 366. | Jasmine | Jas - min(e) | ஜஸ்மின் | மல்லிகை |
| 367. | Jealousy | Jeal - ous - y | ஜெலசி | பொறாமை |
| 368. | Journey | Jour - ney | ஜேர்னி | பயணம் |
| 379. | Jubilee | Ju - bi - lee | ஜூபிலி | 50ஆவது வருடக் கொண்டாட்டம் |
| 370. | Judgement | Judg(e) ment | ஜஜ்மெண்ட் | தீர்ப்பு |
| 371. | Junction | Junc - tion | ஜங்ஷன் | சந்தி |
| 372. | Kangaroo | Kan - ga - roo | கங்காறு | கங்காரு |
| 373. | Keep away | Keep - away | கீப் - ஏவே | மிக அருகில் இராதே |
| 374. | Keep company | Keep - com - pany | கீப் - கும்பனி | நண்பன்போல் இரு |
| 375. | Keep distance | Keep - dis - tance | கீப் - டிஸ்ரென்ஸ் | விலகியிரு |
| 376. | Keep for | Keep - for | கீப் - போர் | ஒருவருக்காக வைத்திரு |
| 377. | Keep going | Keep - go - ing | கீப் கோயிங் | தொடர்ந்து முன்னேறு |
| 378. | Keep-together | Keep - to - gether | கீப் ருக்கெதர் | ஒன்றுசேர் |
| 379. | Keep-up | Keep - up | கீப் - அப் | நல்ல நிலையில் வைத்திரு |
| 380. | Keeper | Keep - er | கீப்பர் | காப்பவர் |
| 381. | Kindness | Kind - ness | கையின்ட்னிஸ் | இரக்கம் |
| 382. | Knowable | Know - a - ble | நோவெபிள் | தெரியக்கூடிய |
| 383. | Knowledge | Knowl - edge | நொலிஜ் | அறிவு |
| 384. | Laboratory | Lab - or - a - to - ry | லபிரெட்ரொறி | ஆய்வுகூடம் |
| 385. | Language | Lan - guage | லங்குவிஜ் | மொழி |
| 386. | Laughable | Laugh - a - ble | லபெபிள் | நகைப்புண்டாக்குகிற |
| 387. | Ledger | Ledg - er | லெஜர் | கணக்குப் புத்தகம் |
| 388. | Leisure | Lei - sure | லெஷர் | ஓய்வுநேரம் |
| 389. | Liberty | Lib - er - ty | லிபெட்டி | விடுதலை |
| 390. | Librarian | Li - brar - i - an | லைபிறேறியன் | நூலகப் பொறுப்பாளர் |
| 391. | Licence | Li - cen - ce | லைசென்ஸ் | அனுமதிப்பத்திரம் |
| 392. | Likewise | Like - wise | லைக்வைஸ் | இதுபோலவே |
| 393. | Limitation | Lim - i - ta - tion | லிமிட்டேஷன் | சூழ்நிலைக் கட்டுப்பாடு |
| 394. | Liquor | Liq - uor | லிக்கர் | மதுபானம் |
| 395. | Location | Lo - ca - tion | லோக்கேஷன் | இருப்பிடம் |
| 396. | Look-after | Look - af - ter | லுக் ஆப்டர் | பேணுதல் |
| 397. | Look-at | Look - at | லுக் - அட் | ஆய்ந்துபார் |
| 398. | Lookdown | Look - down | லுக் - டவுன் | வெறுப்பு காண்பி |
| 399. | Look-for | Look - for | லுக் போர் | தேடிப்பார்/எதிர்பார் |
| 400. | Look-forward | Look - for - ward | லுக் போவோட் | எதிர்பார் |
| 401. | Look-into | Look - into | லுக் இன்ரூ | ஆழ்ந்துபார்/கூர்ந்துபார் |
| 402. | Look-out | Look - out | லுக்அவுட் | எச்சரிக்கையோடு பார் |
| 403. | Lovable | Lov - a - ble | லவ்எபிள் | அன்புக்குரிய |
| 404. | Machinery | Ma - chin - er - y | மெஷினறி | இயந்திரசாதனம் |
| 405. | Magazine | Mag - a - zine | மெகசீன் | சஞ்சிகை |
| 406. | Magistrate | Mag - is - trate | மஜிஸ்ட்றேற் | நீதிபதி |
| 407. | Mailbox | Mail - box | மெயில்பொக்ஸ் | அஞ்சல்பெட்டி |
| 408. | Majestic | Ma - jes - tic | மஜெஸ்டிக் | கம்பீரமான |
| 409. | Majority | Ma - jor - i - ty | மஜோரிட்டி | பெரும்பான்மை |
| 410. | Make for | Make for | மேக்போர் | முன்னேறு |
| 411. | Make from | Make from | மேக்புறம் | விட்டுவிலகு |
| 412. | Make into | Make - in - to | மேக் இன்ரு | மாற்று |
| 413. | Make out | Make - out | மேக் அவுட் | காண்/கண்டுபிடி |
| 414. | Make up | Make - up | மேக்அப் | முடிவுசெய்/அமை |
| 415. | Malpractice | Mal - prac - tice | மல்பிரக்ரிஸ் | தவறான நடத்தை |
| 416. | Maltreat | Mal - treat | மல்ட்ரீட் | கொடுமைப்படுத்து |
| 417. | Mammal | Mam - mal | மமல் | பாலூட்டி |
| 418. | Manage | Man - age | மனிஜ் | கையாளு/நடத்து |
| 419. | Manifest | Man -i - fest | மெனிபிஸ்ட் | தெளிவாகக் காட்டு |
| 420. | Manufacture | Man - u - fac - ture | மன்யுபக்சர் | உற்பத்திசெய் |
| 421. | Marble | Mar - ble | மார்பிள் | சலவைக்கல் |
| 422. | Material | Ma - te - ri - al | மற்ரிறியள் | மூலப்பொருள் |
| 423. | Mature | Ma - ture | மெற்யூர் | வளர்ச்சியடைந்த |
| 424. | Mechanic | Me - chan - ic | மெக்கானிக் | இயந்திரவல்லுநர் |
| 425. | Medical | Me - di - cal | மெடிக்கல் | மருத்துவ சம்பந்தமான |
| 426. | Minister | Min - is - ter | மினிஸ்டர் | அமைச்சர் |
| 427. | Minority | Mi - nor - i - ty | மைனோரிட்ரி | சிபான்மையினர் |
| 428. | Miracle | Mir- a - cle | மிரக்கில் | அற்புதம் |
| 429. | Mirror | Mir - ror | மிரர் | கண்ணாடி |
| 430. | Misadventure | Mis - ad - ven - ture | மிஸ்அட்வென்சர் | துரதிஸ்டம் |
| 431. | Misapply | Mis - ap - ply | மிஸ்அப்பளை | தவறானமுறையில் செயல்படுத்து |
| 432. | Misbehave | Mis - be - have | மிஸ்பகேவ் | தவறாக நட |
| 433. | Misbelief | Mis - be - lief | மிஸ்பலிவ் | தவறான எண்ணம் |
| 434. | Miscalculate | Mis - cal - cu - late | மிஸ்கல்குலேட் | தவறாகக் கணக்கிடு |
| 435. | Mischief | Mis - chief | மிஸ்சிவ் | தீங்கு, தொல்லை |
| 436. | Misconduct | Mis - con - duct | மிஸ்கொண்டக்ட் | தவறான நடத்தை |
| 437. | Miscount | Mis - count | மிஸ்கவுண்ட் | தவறாக எண்ணு |
| 438. | Miserable | Mis - er - a - ble | மிஸ்ஸரெபள் | பரிதாபம்மிக்க |
| 439. | Misguide | Mis - guide | மிஸ்கயிட் | தவறானவழியில் நடத்து |
| 440. | Misinform | Mis - in - form | மிஸ்இன்போம் | தவறான தகவல்கொடு |
| 441. | Misjudge | Mis - judge | மிஸ்ஜஜ் | தவறாக மதிப்படு |
| 442. | Misplace | Mis - place | மிஸ்பளேஸ் | தவறான இடத்தில் வை |
| 443. | Misprint | Mis - print | மிஸ்பரிண்ட் | அச்சுப்பழை |
| 444. | Misspend | Mis - spend | மிஸ்ஸ்பெண்ட் | தவறாகச் செலவு செய் |
| 445. | Mistake | Mis - take | மிஸ்ரேக் | தவறு |
| 446. | Mistranslate | Mis - trans - late | மிஸ்ரான்ஸ்லேட் | தவறாக மொழிபெயர் |
| 447. | Mistreat | Mis - treat | மிஸ்ரீட் | தவறாக நடத்து |
| 448. | Mistress | Mis - tress | மிஸ்ட்ரிஸ் | இல்லத்தலைவி |
| 449. | Mistrust | Mis - trust | மிஸ்ரஸ்ட் | அவநம்பிக்கைகொள் |
| 450. | Misusage | Mis - us - age | மிஸ்யுசிஜ் | தவறான வழக்கம் |
| 451. | Misuse | Mis - use | மிஸ்யுஸ் | தவறாகப் பயன்படுத்து |
| 452. | Moderate | Mod - er - ate | மொடறேட் | மிதமான |
| 453. | Moderation | Mod - er - a - tion | மொடறேசன் | அடக்கம் |
| 454. | Modernize | Mod - ern - ize | மொடானிஸ் | நிகழ்காலத்திற்கேற்ப அமை |
| 455. | Modification | Mod - i - fi - ca - tion | மொடிபிகேசன் | திருத்தம் |
| 456. | Modify | Mod - i - fy | மொடிபை | மாற்றம்செய் |
| 457. | Moment | Mo - ment | மொமன்ற் | மிகக்குறுகிய காலப்பகுதி |
| 458. | Monger | Mon - ger | மொங்கா | பொருள் விற்பவர் |
| 459. | Moonshine | Moon - shine | மூன் -சைன் | நிலாவொளி |
| 460. | Morality | Mo - ral - i - ty | மோறலிட்டி | ஒழுக்கமுறைமை |
| 461. | Moreover | More - o - ver | மோர்ரோவா | மேலும் |
| 462. | Morning | Morn - ing | மோனிங் | காலைவேளை |
| 463. | Mortgage | Mort - gage | மோர்கேஜ் | அடமானம் |
| 464. | Mosquito | Mos - qui - to | மொஸ்கிரோ | நுளம்பு |
| 465. | Movement | Move - ment | மூவ்மெண்ட் | அசைவு |
| 466. | Mountain | Moun - tain | மவுன்டின் | மலை |
| 467. | Naked | Na - ked | நேக்கிட் | நிர்வாணமான |
| 468. | Nameless | Name - less | நேம்லிஸ் | பெயரற்ற |
| 469. | Nameplate | Name - plate | நேம்பளேட் | பெயர்ப்பலகை |
| 470. | Napkin | Nap - kin | நப்கின் | துடைக்க உதவும் துணி |
| 471. | Narrow | Nar - row | நரோ | அகலக் குறைவான |
| 472. | Nationalism | Na - tion - al - ism | நசனலிசம் | நாட்டுப்புற |
| 473. | Natural | Nat - u - ral | நச்சரல் | இயற்கையான |
| 474. | Naughty | Naugh - ty | நோட்டி | குரும்பத்தனமான |
| 475. | Necessity | Ne - ces - si - ty | நெசசிட்டி | இன்றியமையாமை |
| 476. | Necklace | Neck - lace | நெக்லேஸ் | கழுத்து மாலை |
| 477. | Needful | Need - ful | நீட்புல் | தேவையான |
| 478. | Needle | Nee - dle | நீடில் | ஊசி |

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலகுவழி ஆங்கிலம்-19 இல் வெளிவரும்......

மேலதிக தொடர்புகளுக்கு :-
உதயன் கல்விச்சுடர்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி -
071-4273035,021-2223837

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06 . 07 . 1928



மறைவு
01 . 06 . 2008

## அமரர் கணபதிப்பிள்ளை தம்பு

(22.05.2009)

அன்புத் தெய்வமே! பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை
ஆளாக்கி ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்டு இன்றுடன்
ஓராண்டு சென்றாலும்
என்றென்றும் எங்கள் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.....

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (85442)

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

# மின்சார சபைக்கு இரண்டு வாகனங்கள்

யாழ்ப்பாணம், மே22

இலங்கை மின்சாரசபைக்குஇரண்டு வாகனங்கள் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களுடன் மின்சாரசபைக்கான மின்சார உபகரணங்களும் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (203-224)

# புகைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே22

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கோப் பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளில் உள்ள ஜி.சீ.ஈ.சாதாரண தர மாணவர்களிடையே புகைப்பொருள் தொடர்பான விழிப் புணர்வுப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வு அடுத்த மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (204)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
மரியதாஸ்
இராஜேஸ்வரி

மண்ணில்
22.06.1956

விண்ணில்
22.04.2009

கடந்த 22.04.2009 அன்று முள்ளியவளையில் அகால மரணமான எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
ம.ராஜ்அயந்தன் (மகன்), ம.ராஜ்டேரின்சன் (மகன்),
திருமதி வெ.மேரிடொறிற்றாராஜி (மகள்),
ம.டெனிட்டாராஜி (மகள்), அ.நேசன் (மருமகன்),
வெ.அபிஷா (பேரப்பிள்ளை).

மேற்கு வீதி,
ஊர்காவற்றுறை.
(85436)

# கண்ணீர் அஞ்சலி

மீசாலை வடகிழக்கு மாதர் சிக்கன கடன் வழங்கும்
கூட்டுறவுச் சங்க நீண்டகால பொருளாளராகிய

## திருமதி சித்திரகௌரி கோபாலகிருஷ்ணன்



அவர்களின் (22.04.2009) திடீர் மறைவைக் கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீசாலை வடகிழக்கு மாதர் சிக்கன கடனுதவ, கூட்டுறவுச் சங்கம்,
மீசாலை வடக்கு, கொடிகாமம். (85407)

தலைவர்,
செயலாளர்,
அங்கத்தவர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

மீசாலை வடக்கு இராமாவில் மாதர் கிராம
அபிவிருத்திச் சங்க நீண்டகால அங்கத்தவராகிய

## திருமதி சித்திரகௌரி கோபாலகிருஷ்ணன்




அவர்களின் (22.04.2009) திடீர் மறைவைக் கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இராமாவில் மாதர் கிராம
அபிவிருத்திச் சங்கம், கொடிகாமம். (85406)

தலைவர்,
செயலாளர், அங்கத்தவர்கள்.

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
23.08.1924

உதிர்வு
05.06.2005

திதி: 22.05.2009

யாழ்.சங்கானையில் பிறந்து, அராலி தெற்கில் வாழ்ந்து
கொழும்பு, காக்கைதீவில் இறைவனடி எய்திய

## அமரர் தா.விசுவலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்,
ராசிங்கம்/ சங்கானை வாத்தியார்)

அவர்களை நினைவு கூருகின்றோம்.
மனைவி,பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/558627)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை வன்னியசிங்கம்

உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் பரந்தனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வே. வன்னியசிங்கம் 17.05.2009 ஞாயிற்றுக் கிழமை வன்னியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சிந்தாமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதியரின் அன்பு மருமகனும் மீனாட்சியின் அன்புக் கணவரும் சிவகுமார், ஜீவகுமார், குமரகுமார், சுரேஷ்குமார், பாலகுமார், சிவதேவி, மதனகுமார், நந்தகுமார், ஸ்ரீதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், கந்தையா மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரனுமாவார்.

இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.தர்மஜெகநாதன்
(தர்மு- பெறாமகன்)

புளியடி வைரவர் கோயிலடி,
உடுவில் தெற்கு, சுன்னாகம். (சி/558659)

# வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே22

நாவற்குழியில் உள்ள யாழ்.செயலக அரச உணவுக் களஞ்சியத்தின் உள்ளக வீதி தார் ஊற்றித் திருத்தம் செய்யப்பட்டுவருகின்றது. (224)

* * *

நீர்வேலி, கோப்பாய் ஊடான இராஜ வீதி செப்பனிட்டு திருத்தப்பட்டு வருகின்றது.

கடந்த வருட இறுதிப் பகுதியில் செப்பனிடப்பட்டு திருத்தப்பட்டிருந்த வேளையில் அப்போது ஏற்பட்ட வெள்ளஅனர்த்தம் காரணமாக வீதியோரமாக சிதைவடைந்திருந்தது.

இதனைத் தொடர்ந்து இவ் வீதியை செப்பனிட்டுத் தருமாறு பொது மக்கள் பல்வேறு தரப்பினரிடையேயும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (72)

# பாசறை நிகழ்வு

அச்செழு சைவப் பிரகாச வித்தியாசாலையில் தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கு விசேட கணிதப் பயிற்சிப் பாசறை நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 80 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். நிகழ்வில் பாடசாலை அதிபர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (203-72)

# நீங்காத நினைவில் ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
09 . 11 . 1979



விண்ணில்
01 . 06 . 2008

## அருமலிங்கம் (சாம்பசிவம்) விஷ்ணு

திதி: 22.05.2009

அன்பு வார்த்தைகளால் அனுதினமும்
அக்காமாரை அரவணைத்த எம் உறவே!
கடலலைகள் ஓய்ந்தாலும் உன்
நினைவலைகள் ஓயாது
நல்லவனாய் வல்லவனாய் பார் போற்ற
வாழ்ந்து எம் குலம் காத்த உத்தமனே!
உன் நினைவில் எம் விழிநீர் வழிகிறது.

நாகர்கோயிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சாம்பசிவம் விஷ்ணு லண்டனில் அமரத்துவம் அடைந்து ஓராண்டு நினைவில் எமக்கு ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுடன் துயர் பகிர்கின்றோம்.

ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்:
அக்காமார்-
பொன்ராசா கலையரசி குடும்பம்,
வெள்ளிமயில் பதுமநிதி குடும்பம்,
செல்வம் மேரி குடும்பம்.

வேதவனம் ஒழுங்கை,
தும்பளை வீதி,
பருத்தித்துறை.
(சி/558617)

சுந்தர்சன்
மானிப்பாய்
SUNDHARSON
Jaffna Road, Manipay

அதிரடி மலிவு விற்பனை

23.05.2009ஆம் திகதி சனிக்கிழமை
தொடக்கம் மாபெரும்
மலிவு விற்பனை ஆரம்பம்

Sale



★ மின் விசிறிகள் (Ceiling Fans, Table fans, Stand fdans)
★ மின் அலங்கார விளக்குகள்,சுவர் விளக்குகள்,மேசை விளக்குகள,கூரை விளக்குகள் (Chandiliyars, Wall Brackets, Table Lamps, Hood fittings)
★ றைஸ் குக்கர்கள் (Rice cookers) ,அரைக்கும் இயந்திரங்கள், (Blenders),மின்அழுத்திகள் (Iron boxes), சாஜர் லைற்றுகள், (Charger Lights).
★ பல தரப்பட்டசுவிச்,பிளக் வகைகள் (Switches, Plug & Switches)
★ றோல் பிளக் வகைகள் (Extension cords),நீர் சுத்திகரிப்புத் தாங்கிகள் ( Water Filters),மின் அடுப்பு (Hot Plates) சுடுநீர்/குளிர்நீர் மாற்றிகள் (Water Despensers), மின் கேத்தல்கள். ( Electric Kettles.)
★ DVD Players,VCD Players,Boofer Sets.
★ கலர் ரியூப்பல்ப்,கலர் "U" பல்ப்வகைகள் (Colour T/Bulbs, Colour Energy Saving bulbs)

Sale

விசேட குறிப்பு :- ஞாயிறு தினத்திலும் குறித்த
மலிவு விற்பனை தொடரும் என்பதை
வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்!
சிறந்த தெரிவுகளுக்கு முந்துங்கள்! உங்கள்
தேவையே எங்கள் சேவை!

கட்டட ஒப்பந்தக்காரர்கள்,வியாபாரிகள்,மின்
இணைப்பாளர்கள்,வாடிக்கையாளர்களுக்குத்
தேவையான உபகரணங்களை மிக
மலிவுவிலையில்
பெற்றுக்கொள்ள ஒரே அரிய
சந்தர்ப்பம்!தவறவிடாதீர்கள்!

மலிவு
விற்பனை

சுந்தர்சன்,
யாழ்.வீதி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ.சங்கத்தில் புனரமைக்கப்பட்ட கட்டடங்கள் திறப்பு

யாழ்ப்பாணம்,மே 22

புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் புனரமைக்கப்பட்ட தலைமைக் காரியாலயம் மொத்தக் களஞ்சியம், மினி கோப்சிற்றி போன்றவற்றின் திறப்பு விழா நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி கே.இராஜரட்ணம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்து கொண்டு மினி கோப்சிற்றி விற்பனையகத்தைத் திறந்து வைப்பார்.

முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் கலந்து கொண்டு சங்கத் தலைமைக் காரியாலயத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ்.மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்) மொத்தக் களஞ்சியத்தை திறந்து வைப்பார்.

(203-224-111)

## நாட்டில் பயங்கரவாதம் அழிக்கப்பட்டதால் தேசிய அபிமானத்தையும் வென்றுவிட்டோம்

### பாதுகாப்புச் செயலர் கோத்தபாய தெரிவிப்பு

கொழும்பு,மே 22

நாட்டில் ஊடறுத்திருந்த பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதால் எமது தாய் பூமியை மீட்டதும் மட்டுமன்றி இதுவரை காலமும் இழக்கப்பட்டிருந்த தேசிய அபீமானத்தையும் படையினர் வெற்றிகொண்டுள்ளனர் - என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த 30 வருட காலங்களாக நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்று அனைவருக்கும் தலையிடியாக விளங்கிய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு முடிவை ஏற்படுத்திக் கொடுக்க வீரமிகு படையினரால் முடிந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம் - என்றும் அவர் கூறினார்.

காலி, பூசா பகுதியில் இடம்பெற்ற இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுடனான சந்திப்பொன்றின்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (சி)

## பயங்கரவாதத்தை தலைதூக்க விடாமல் அரசியல் தீர்வை உடனடியாக முன்வைக்குக!

### ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, மே 22

தற்போது பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் முற்றாக முடிவுற்றதால் மீண்டும் ஒரு பயங்கரவாதம் தலைதூக்காதிருப்பதற்கு அரசியல் தீர்வை உடன் முன்வைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

முன்வைக்கப்படும் அரசியல் தீர்வு நாட்டின் அரசியல் யாப்புக்கு முரணல்லாதவாறு, வடக்கு மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு அமைந்தால் அதற்கு நாடாளுமன்றத்தில் முழுமையான ஆதரவை வழங்கத் தயாராகவிருப்பதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே இதைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தத்தை வெற்றியுடன் நிறைவு செய்த முப்படையினருக்கும் அத்னுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் நாம் எமது நன்றிகளையும் பாராட்டுகளையும் மீண்டும் ஒரு தடவை தெரிவித்துக் கொள்கிறோம்.

யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து பாரிய பல சவால்களை இந்த அரசு எதிர்நோக்க வேண்டியுள்ளது. வடக்கு மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் உள்ளவர்களை மீள்குடியமர்த்துதல் போன்றவையே அவற்றில் மிக முக்கியமானவை.

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் அகதிமுகாம்களில் வசிக்க முடியாது. அவர்களுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டு அவர்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படல் வேண்டும்.

அதேபோல் அம்மக்களின் பிரச்சினையைத் தீர்க்க உடன் அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்படல் வேண்டும். இப்போது இதை இந்நாடு மாத்திரமன்றி முழு உலகமுமே எதிர்பார்த்து நிற்கின்றன.

இராணுவத் தீர்வு இறுதித்தீர்வல்ல என்றும் அரசியல் தீர்வே இறுதித்தீர்வாக அமையும் என்றும் ஜனாதிபதியே நாடாளுமன்றில் கூறினார். அதற்கமைய அரசியல் தீர்வை முன்வைக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும்.இன்னும் தாமதிக்க முடியாது.

இந்த நாட்டு அரசியல் யாப்புக்கு முரணற்ற வகையிலும் வடக்கு மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும் அரசியல் தீர்வு அமைந்தால் நாம் நாடாளுமன்றத்தில் எமது முழுமையான ஆதரவை அதற்குப் பெற்றுக்கொடுப்போம்.

வடக்கு மக்கள் பயங்கரவாதத்தின் மீது நாட்டங்கொண்டவர்கள் அல்லர். ஆனால், அரசியல் தீர்வு முன்வைக்கப்படாவிட்டால் மீண்டும் ஒரு பயங்கரவாதம் உருவாகலாம். அப்படி இடம்பெற்றால் படையினர் உயிர்த்தியாகம் செய்து பெற்ற யுத்த வெற்றி அர்த்தமற்றதாகிவிடும்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் ஊடாகத் தயாரிக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வு யோசனையையும் அரசு உடன் வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (சி)

## மாதகல் விநாயகர் ஆலயத்தில் சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,மே 22

சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தின் ஏற்பாட்டில் மாதகல் விநாயகர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை தொடங்கி அடுத்த மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை திருவிழாக் காலங்களில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

திருவிழாக் காலத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சைவசமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில், சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அடுத்த மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

(204)

## சமய சந்நிதிகளில்

நவாலி, மே 22

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (100)

* * *

யாழ்ப்பாணம், மே 22

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

உசன் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

வடமராட்சி, மே 22

துன்னாலை, காரைக்கூடல் ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் வைரவப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் பூசையும் இடம்பெறும். (204-236)

* * *

யாழ்ப்பாணம், மே 22

பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலய மஹாகும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (204)

* * *

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சாமுண்டீஸ்வரி சமேத சிவஞான வைரவர் ஆலயத்தின் பரணி உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகித் தொடர்ந்து விசேட பூசை, வசந்தமண்டப் பூசை என்பன நடைபெற்று சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறும். (9-78)

* * *

கொக்குவில் கிழக்கு காளிகாம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (204)

## மதிய உணவில் கடல் உணவு சேர்க்குமாறு பணிப்பு

கோப்பாய்,மே 22

பாடசாலைகளில் வழங்கப்பட்டுவரும் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மாணவனொருவனுக்கு 10 கிராம் மீனின் உணவு சேர்க்கப்பட வேண்டும் என உலக உணவுத் திட்டத்தினர் கோட்டக் கல்வி அதிகாரியூடாக பணித்துள்ளனர்.

கடந்த காலங்களில் கடல் உணவு மாணவனொருவனுக்கு 20 கிராம் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளையில் மதிய உணவுடன் கூடுதலாக மரக்கறிவகைகளையும் சேர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (203-72)

## கைதடி கிராமிய மருந்தக வளாகத்தில் நலன்புரி நிலைய மாணவருக்குப் பாடசாலை

யாழ்ப்பாணம், மே 22

கைதடியில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் கடந்த செவ் வாய்க்கிழமை காலை 9 மணிக்குகைதடி கிராமிய மருந்தக வளாகத்தில் ஆரம் பித்து வைக்கப்பட்டன.

மேற்படி கல்விச் செயற்பாடுகளுக்காக கிராமிய மருந்தக வளாகத்தில் அமைந்த வகுப்பறைத் தொகுதியொன்றினை சம்பிரதாயபூர்வமாக யாழ்.அரச அதிபர் க.கணேஸ் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வு கைதடி முத்துக்குமார வித்தியாலய அதிபர் எஸ்.பவளகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வரதராஜமூர்த்தி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதி அமைப்பாளர் சாள்ஸ், கைதடிப் பகுதி படைத்தளபதி உட்பட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நலன்புரி நிலையங்களில் கல்வி பயிலும் தரம் ஒன்று தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக சிறுவர் பாதுகாப்பு நிதியம் வகுப்பறைத் தொகுதிகளை அமைத்துக் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்புடன் 'யுனிசெவ்' அமைப்பும் உதவிகளை வழங்கியிருந்தது.

பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்து வகைகள், புத்தகப் பைகள், பாடப் புத்தகங்கள், சீருடைத் துணிகள் என்பனவும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

கொடிகாமம், இராமாவில் பகுதியில் உள்ள முகாமில் தற்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட குடியிருப்புப் பகுதியில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தலுக்கான செயற்பாடுகளுக்கான வகுப்பறைத் தொகுதிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-131)



கைதடி கிராமிய மருந்தக வளாகத்தில், கைதடி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கென அமைக்கப்பட்ட பாடசாலையின் ஆரம்ப நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், 'யுனிசெவ்' பிரதிநிதி மக்கி ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை முதல் இரண்டு படங்களிலும் பாடசாலைக் கொடியை தென்மராட்சி வலயக் கல்வி [illegible] தை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: மண்டுவில் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தை வென்றுவிட்டது என்ற வெற்றிக் களிப்பு வேண்டாம்

ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தை வென்றுவிட்டது என்ற வெற்றிக் களிப்பு வேண்டாம்.

இத்தனை ஆண்டுகாலமாக இருந்த ரணத்தை ஆற்றுவதற்கு வழிபார்க்க வேண்டும். அனைத்து சமுதாயத்தினரும் சம உரிமையுடன் வாழவேண்டும் என்று ஐ.நா.வின் மனிதாபமான பணிகளுக்கான துணைப் பொதுச் செயலர் ஜோன் ஹோம்ஸ் இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பாக பி.பி.ஸி. க்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பாக ஐ.நாவின் மனிதாபமான பணிகளுக்கான துணை பொதுச்செயலர் ஜோன் ஹோம்ஸ் பி.பி.ஸி.க்கு வழங்கிய செவ்வியின் முழுவிவரம் வருமாறு:

**கேள்வி:** கொல்லப்பட்டவர்களின் உடல்கள் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படலாம் என்பது போன்ற அச்சங்கள் நிலவுகின்றனவே?

**பதில்:** அப்படி செய்வது சரியான ஒன்றாக இருக்காது என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. இப்போது என்ன செய்ய வேண்டும் என்றால், இதுதான் இலங்கை அரசாங்கத்திற்கு நான் சொல்வது, ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தை வென்றுவிட்டது என்ற வெற்றிக்களிப்பு வேண்டாம். இந்த நேரத்தில் இத்தனை ஆண்டுகாலமாக இருந்த ரணத்தை ஆற்றுவதற்கு வழிபார்க்க வேண்டும். அனைத்து சமுதாயத்தினரும் சம உரிமையுடன் வாழவேண்டும்.

**கேள்வி:** அதேநேரம் விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலர் சரணடைந்துள்ளனர், சிலர் காயமடைந்த நிலையில் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள். எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சட்டபூர்வ வசதிகள் கிடைக்கின்றனவா என்பது குறித்து ஐ.நா.வுக்கு ஏதாவது தெரியுமா?

**பதில்:** எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. முதலில் விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்கள் தவிர மற்றவர்கள் மீது நடவடிக்கை இருக்காது என இலங்கை அரசு கூறியது. முன்பு மக்கள் இடம்பெயர்ந்து முகாம்களுக்கு சென்றபோது ஏராளமான மக்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதில் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர்களும் இருந்தனர். இவையெல்லம் முன்னர் நடந்தது. ஆகவே அனைவரும் முறையாக சட்டத்திற்கு உட்பட்டு நடத்தப்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

**கேள்வி:** அங்கே போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தபோது மருத்துவ சிகிச்சைகளை வழங்கி வந்த மூன்று மருத்துவர்கள் தற்போது அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள்தான் அங்குள்ள நிலைமை குறித்து சர்வதேச ஊடகங்களுக்கும் தகவல் வழங்கி வந்தனர். அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய ஐ.நா.என்ன செய்கிறது?

**பதில்:** எங்களுக்கு அவர்களிடம் இப்போது தொடர்பில்லை. ஒருவர் காய மடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து விடுவிக்கப்பட்டார் என்று அறிய வருகிறோம். நான் முன்பு கூறியது போல, போர்ப்பகுதியில் மிகமிக இக்கட்டான சூழ்நிலையில், மிகவும் சிறப்பாக பணியாற்றிய இவர்கள் முறையாக நடத்தப்பட வேண்டும். அவர்களை கைது செய்ய கூடாது என்பதை கூறுகிறேன்.

**கேள்வி:** விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் நடேசன், சமாதானச் செயலகத்தின் பொறுப்பாளர் புலித்தேவன் உள்ளிட்டோர் இராணுவத்திடம் சரணடையும் நோக்கில் வெள்ளைக் கொடியை ஏந்தியபடி வந்தபோது, அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக சில செய்திகள் உலவுகின்றன. சரணடைவது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் ஐ. நா.உள்ளிட்ட நிறுவனங்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடந்ததாகவும் கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் குறித்து உங்களுக்கு ஏதாவது தெரியுமா?

**பதில்:** பல்வேறு இடங்களில் இது போன்ற தகவல் வந்துள்ளது என்பதை நான் அறிவேன். நாங்கள் அவற்றை பகிர்ந்து கொண்டோம். என்ன நடந்தது என்பது எங்களுக்கு தெளிவாகத் தெரியவில்லை. சரண் அடைவது என்பது அவர்களது கோட்பாட்டிற்கு மாறானது என்பதால், அவர்களது தரப்பே அவர்களை சுட்டுகொன்று விட்டது என்று கூறப்படுகிறது. இதற்கு எதிர் மாறாகவும் கூறப்படுகிறது. எதையும் எங்களால் உறுதி செய்ய முடியாமல் இருக்கிறது. இவை அனைத்துமே கடைசி நேரத்தில் நடந்துள்ளதால் எதுவும் சொல்ல முடியாமல் இருக்கிறது.

**கேள்வி:** ஆனால் அதே நேரத்தில் விடுதலைப் புலிகள் என்ன செய்ய முன்வந்தார்கள் என்பது குறித்து உங்களால் உறுதியாக சொல்ல முடியுமா?

**பதில்:** என்னால் விவரமாக கூறமுடியாது. விடுதலைப்புலிகளிடம் இருந்து நேரடியாக நான் கேட்கவில்லை. ஆனால் அவர்கள் திங்கட்கிழமை மூன்றாம் தரப்பினரிடம் சரணடையத் தயாராக இருப்பதாக ஒரு சிலர் சொன்னார்கள், கடைசி நேரத்தில் சொன்னார்கள். அது மிகவும் காலம் தாழ்ந்து விட்டது என்று தான் சொல்ல வேண்டும். அதற்கு பின்னர் என்ன நடந்தது என்பதை என்னால் சொல்ல முடியாது.

**கேள்வி:** விடுதலைப்புலிகள் சரணடைய முன் வந்தது குறித்து ஐ.நா., இலங்கை அரசு மற்றும் புலிகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதா?

**பதில்:** அப்படியான ஒரு பேச்சுவார்த்தை இடம்பெறவில்லை. அந்த கோணத்தில் பேச்சுவார்த்தை நடந்ததாக நாங்கள் அறியவில்லை. சரண் அடைந்தால் தீங்கு நேராது என்று பொதுவாக அரசாங்கம் சொல்லி இருந்ததாக நாங்கள் அறிகிறோம்.

**கேள்வி:** இது ஒரு புறம் இருக்க, கடந்த ஏப்ரல் மாதம் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உள்நாட்டில் இடம்பெயர்ந் தோருக்கான முகாம்களுக்கு வந்த நிலையில், அந்த முகாம்கள் மிகவும் ஜன நெருக்கடியுடன் காணப்படுவதாகவும், குடிநீர், கழிப்பறை வசதிகள் போதுமானதாக இல்லை என்றும் ஏற்கனவே ஐ.நா. தெரிவித்திருந்தது. தற்போது மேலும் 70 ஆயிரம் பேர் வந்துள்ள நிலையில் அங்கே நிலைமை எப்படியுள்ளது.



**பதில்:** மெனிக்பாம் பகுதியில் இருக்கும் பிரதான முகாமில் ஜனநெருக்கடி ஏற்பட்டு விடும் என்று கூறியுள்ளோம். புதியதாக இடங்கள் சுத்தம் செய்யப்பட்டு தயார் செய்யப்பட்டு வருகின்றன. இது கொஞ்சம் உதவியாகத்தான் இருக்கும். ஆனால் பொதுவாக எல்லா மக்களையும் ஒரே இடத்தில் வைத்திருப்பது நல்ல தல்ல. அவர்களை யாழ்ப்பாணம், திருகோண மலை, மன்னார் போன்ற மற்ற இடங்களுக்கு கொண்டு செல்லலாம் என சொல்லி வருகி றோம். ஏனென்றால் ஒரே இடத்தில் இருந் தால் அடிப்படை வசதிகள் கிடைப்பதில் கூட சிரமம் இருக்கும்.

## இத்தனை ஆண்டுகளாக இருந்த ரணத்தை ஆற்றுவதற்கு வழிபார்க்க வேண்டும் என்கிறார் ஜோன் ஹோம்ஸ்

அத்தோடு முகாமில் இருக்கும் அனைவரும் சர்வதேச சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு நடத்தப்பட வேண்டும். அவர்களுக்கு உறவினர்கள் பற்றிய விவரங்கள் எவ்வளவு சீக்கிரம் கிடைக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தெரிய வேண்டும். பதிவு செய்தல் மற்றும் அடையாள அட்டைகள் சீக்கிரமாக கொடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள் சுதந்திரமாக உலவ முடியும். இராணுவம் முகாமுக்குள் இருக்க கூடாது. முகாமுக்கு வெளியே இருக்கலாம். அத்தோடு மக்கள் விரைவாக வீடுகளுக்கு திரும்ப அனுமதிக்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திடம் கூறிவருகிறோம்.

கண்ணிவெடிகள், வெடிபொருள்களை அகற்ற வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். இருந்தபோதிலும் மக்கள் விரைவாக வீடு திரும்ப அனுமதிக்க வேண்டும் என்றார் ஐ.நா.வின் மனிதாபமான பணிகளுக்கான துணைப் பொதுச் செயலர் ஜோன் ஹோம்ஸ்.

# பிரிட்டிஷ் குடிவரவு நடைமுறைகளை இலகுபடுத்தியுள்ளதாகத் தூதரகம் அறிவிப்பு

இலங்கையர்கள் விஜயம் செய்வதற்கும் கல்வி கற்பதற்கும் தொழில் பார்ப்பதற்கும் பிரிட்டன் மிகவும் பிரபல்யம் வாய்ந்த நாடாக விளங்கி வருகிறது. இலங்கையர்கள் அங்கு குடியேறி சுக வாழ்வு வாழ்வதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றது.

இலங்கையைப் போன்றே பிரிட்டனிலும் எல்லைகளை வலுவாகவும் பாதுகாப்பாகவும் பேணுவதில் அந்நாட்டு அரசாங்கம் மிகுந்த அக்கறை காண்பித்து வருகின்றது. விசா சேவைகளை மேலும் விருத்தி செய்வதிலும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலும் பிரிட்டிஷ் எல்லைப் பாதுகாப்பு நிறு வனம் தொடர்ச்சியாக கவனம் செலுத்தி வருகிறது.

இதற்காக, தற்போதைய நடைமுறைகளும் நடவடிக்கைகளும் அடிக்கடி மறு மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. கடந்த சில வருடங்களில் பிரிட்டனுக்கான விசா விண்ணப்பதாரர்கள் இச்சேவையின் மேம்பாடு பற்றி உணர்ந்திருப்பார்கள். மேலும், இலங்கையர்களின் விண்ணப்பங்கள் தற்போது சென்னையிலுள்ள பிரிட்டிஷ் பிரதி உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் பரிசீலனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

2007ஆம் ஆண்டு முடிவில் பிரிட்டிஷ் எல்லை நிறுவனம் தரவு சேகரிப்பு சேவைகளில், உலகளாவிய ரீதியில் 'பயோ மெற்றிக்' (Biometric) எனப்படும் நவீன முறையில் தரவு சேகரிக்கும் முறைமையை ஆரம்பித்தது.

தற்போது நாங்கள் 137 நாடுகளில் 'பயோ மெற்றிக்' முறையில் தரவுகளை சேகரித்து 3 மில்லியன் விசா விண்ணப்பதாரர் களுக்கு சேவைகளை வழங்கி வருகிறோம். இச்சேவையை நாங்கள் மட்டும் செய்யவில்லை. ஆளடையாள முகாமைத்துவத்திற்கு கைத்தொழில் தரமாக 'பயோமெற்றிக்' விருத்தியடைந்து வருவதுடன், சகல கடவுச் சீட்டுக்களும் அநேகமாக தனித்துவமான 'பயோ மெற்றிக்' முறையில் அடையாளம் காணும் முறைமையை கொண்டிருக்கும். பிரிட்டிஷ் விசா விண்ணப்பதாரர்கள் சில தனிப்பட்ட தகவல்களைத் தருவதுடன் ஆவணங்கள் சிலவற்றையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். இது தேவைக்கதிகமானது எனக் கருதப்படலாம்.

### விண்ணப்பங்கள் பரிசீலனை

ஆனால், விண்ணப்பம் யதார்த்தமானது என மதிப்பிடுவதற்கு இது எமக்கு உதவு கிறது. 'பயோமெற்றிக்' முறை, பிரிட்டிஷ் பிரஜைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மட்டுமன்றி விசாவை பெறுவோர் மோசடியான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதையும் ஆளடையாள மோசடி புரிவதையும் தடுக்க உதவுகிறது. அடையாள மோசடி உலகளாவிய ரீதியில் முக்கியமானதும் அதிகரித்து வருவதுமான பிரச்சினையாகும். இது பயங்கரவாதத்திற்கும் திட்டமிட்ட குற்றச் செயல்களுக்கும் துணை புரிவதுடன் தேசிய பொருளாதாரத்தையும் சீரழிக்கிறது.

உங்களை அடையாளம் காண்பதற்குப் பயன்படுத்தப்படும் தனித்துவமான குணாம்சங்களைக் கொண்டதே 'பயோமெற்றிக்' முறையாகும். குறிப்பாக, விசா விண்ணப்பங்களைப் பொறுத்த அளவில் உங்கள் பொதுவான முகச்சாயலையும் 10 விரலடையாளங்களையும் நீங்கள் கொடுக்க வேண்டும். உங்கள் பெரு விரல்களையும் ஏனைய விரல்களையும் ஒரு நுண்ணாய்வுக் கருவியின் மீது வைத்து இதற்கான பரிசோதனையை செய்து கொள்ள வேண்டும். இப்பரிசோதனை முடிவடைந்து விரலடையாளங்களும் பதிவு செய்யப்பட்ட பின்னர் உங்கள் முகம் புகைப் படம் எடுக்கப்படும்.

### விசா குறித்து முடிவெடுத்தல்

இந்த நடைமுறைகள் விரைவானதும் உங்கள் விருப்பத்தின் பேரிலானதும் இலகுவானதும் அத்துமீறல் அற்றதாகவும் இருக்கும். பிரிட்டிஷ் எல்லை நிறுவனத்தினால் 2007 ஆம் ஆண்டில் ஆரம்பக்கப்பட்ட இந்த முறைமை, உலகெங்கிலுமுள்ள பிரிட்டிஷ் தூதராலயங்களில் இயங்கிவரும் 52 விசா பிரிவுகளிலிருந்து 22அதிசிறந்த உலக நிலை [illegible] கெனவே தீர்மானம் [illegible] பணிகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 2008ஆம் ஆண்டு ஜூன் மாதம், இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை விசாப் பிரிவை மையமாகக் கொண்டு, இலங்கை கொழும்பு விசாப் பிரிவு இயங்க ஆரம்பித்தது. பிரிட்டிஷ் எல்லை நிறுவனத்தின் சார்பில் வாடிக்கையாளர்களின் விசா விண்ணப்பங்களை ஆராய்ந்து வரும் சென்னைப் பிரிவு, இலங்கையிலிருந்து விசாவுக்கு விண்ணப்பிப்போர் குறித்து முடிவு எடுப்பதில் தீர்க்கமுடன் செயற்பட்டு வருகிறது. அவர்களது விண்ணப்பங்கள் தொடர்பான முடிவையும் இப்பிரிவு அவர்களுக்கு அறிவித்து வருகிறது.

★ கடவுச்சீட்டுக்களை தன்னகத்தே வைத்திருக்கும் பிரிட்டனின் கொழும்பு உயர் ஸ்தானிகராலயம் விசா விண்ணப்ப நிலையத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் அவற்றை விண்ணப்பதாரர்களிடம் திருப்பிக்கொடுத்து விடுகிறது. கடவுச்சீட்டுக்கள் சென்னைக்கு அனுப்பப்படுவதில்லை.

★விசாவுக்கு விண்ணப்பிக்க அதிக செலவு ஏற்படுவதில்லை. விசா கட்டணங்கள் உலகளாவிய ரீதியில் நிர்ணயிக்கப்படு கின்றன. உலகின் எப்பகுதியிலிருந்து விண் ணப்பித்தாலும் விசாக் கட்டணங்கள் ஒரே அளவிலானதாகவே இருக்கும்.

★பிரிட்டிஷ் விசா விண்ணப்பங்களை பரிசீலனை செய்வோர் எங்கிருந்து பணியாற்றினாலும் கடுமையான ஒழுக்கக் கோவைக்கு உட்பட்டே செயலாற்ற வேண்டும். இதனால் இவர்கள் ஒருமைப்பாட்டுடனும் தனிப்பட்ட மற்றும் உணர்வுபூர்வமான விடயங்களை மிகக் கவனமாகவும் பிரிட்டிஷ் தரவு பாதுகாப்பு சட்டத்திற்கமையவும் விண்ணப்பங்களை கையாள வேண்டும்.

### வாடிக்கையாளர் ஒப்பந்தம்

பிரிட்டனிலும் வெளிநாடுகளிலும் வாடிக்கையாளர்கள் செய்யவேண்டிய சகல விடயங்களையும் எடுத்துக் காட்டும் வாடிக்கையாளர் ஒப்பந்தம் ஒன்றை பிரிட்டிஷ் எல்லை நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. விசா விண்ணப்ப முடிவுகளுக்கான விநியோக இலக்குகளை இச்சாசனம் தருகிறது. முடிவு எடுக்கும் பணியை சென்னைக்கு மாற்றிய பின் சில தகவல் தொழில்நுட்ப பிரச்சினைகள் காரணமாக சில விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதில் ஓரளவு தாம தம் ஏற்பட்டது.

இக்குறைபாடுகளுக்கு இப்பொழுது தீர்வு காணப்பட்டு வருகிறது. விண்ணப் பதாரர்கள் உத்தேச பிரயாணத் திகதிக்கு நியாயமான அளவு நாள்கள் முன்னதாகவே விண்ணப்பங்களைக் கையளித்துவிடவேண்டுமென ஆலோசனை கூறப்படுகிறது. விசா விண்ணப்பங்களில் ஏற்படும் தாமதங்கள் குறித்து விசா விநியோக அலுவலகத்தில் விசாரிக்கலாம்.

# நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஓமந்தை இடைத்தங்கல் முகாமில் உள்ளார்

வவுனியா, மே 22

வன்னி போர்க்களத்தில் அகப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் அங்கிருந்து வெளியேறி வவுனியா வரும் வழியில் ஓமந்தையில் படையினரால் வழிமறிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம் ஒன்றில் படையினரால் தங்க வைக்கப்பட்டிருப்பதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த திங்கட்கிழமை முள்ளி வாய்க்கால் பகுதியில் இருந்து பெருமளவு பொது மக்களுடன் வெளியேறிய கனகரத்தினம், கடந்த 19ஆம் திகதி வவுனியா வந்தடைந்ததாகவும், ஓமந்தைச் சோதனைச் சாவடியில் தன்னை ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என அடையாளம் காட்டி கொழும்பு செல்வதற்கு அனு மதிக்குமாறு கேட்டுக்கொண்ட போதிலும் அதனை நிராகரித்த படையினர் அவரை செட்டிகுளத்தில் உள்ள இடைத்தங்கல் முகாமில் தங்க வைத்திருக்கின்றனர் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [illegible] முகாமில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் செய்தி கூட நேற்று முன்தினம் காலை தான் வெளியே தெரியவந்திருக்கின்றது.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்களிடம் கேட்ட போது கனகரத்தினம் வவுனியா வந்து செட்டிகுளம் முகாமில் தங்க வைக்கப்பட்டிருப்பது பற்றிய தகவல்கள் தமக்குக் கிடைத்திருப்பதாகவும் அவரை விடுவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தன.

இதேவேளையில் வன்னி போர்க்களத்தில் இருந்த கனகரத்தினத்துடனான தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் படையினர் அப்பகுதியில் பாரிய தாக்குதலை நடத்தியதையடுத்து அவர் காணாமல் போயிருப்பதாகவும் அவரைக் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சபாநாயகரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன் தினம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

இந்நிலையிலேயே கனகரத்தினம் வவுனியா வந்தடைந்[illegible] கிடைத்திருக்கின்ற[illegible] வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபா குறித்து வெளியான செய்தியால் சட்டக்கல்லூரி மாணவர்கள் போராட்டம்

## 4 பேர் தீக்குளிக்க முயற்சி!

சென்னை, மே 22

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்ற அறிவிப்புக்குக் கண்டனம் தெரிவித்து சட்டக்கல்லூரி மாணவர் ஒருவர் சென்னை ரயில் முன் படுத்துப் போராட்டம் நடத்தினார். 4 பேர் தீக்குளிக்க முயன்றனர்.

புலிகளின் முக்கிய தலைவர்கள், இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து தமிழ்நாட்டில் கடந்த 2 நாள்களாக ஆங்காங்கே போராட்டங்கள் நடந்தன. சென்னையில் ஒரு பஸ் மீது பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. சென்னை, கடலூர், திருவாரூர், தஞ்சாவூர் உட்பட பல இடங்களில் 21 பஸ்கள் மீது கல்வீசித் தாக்கப்பட்டதில் சேதம் அடைந்தன. பல ஊர்களில் கடைகள் அடைக்கப்பட்டன. கண்டன ஊர்வலங்கள் நடந்தன. இந்தப் போராட்டம் நேற்றுமுன்தினமும் தொடர்ந்தது.

வேலூர் மாவட்டம், அரக்கோணம் ரயில் நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை 7.40 மணியளவில் ஜோலார்பேட்டை எக்ஸ்பிரஸ் ரயில் வந்தது. அந்த ரயில் அரக்கோணத்தில் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்னை புறப்படத் தயாராக நின்றது.

அப்போது, திடீரென இளைஞர் ஒருவர் 'பிரபாகரன் வாழ்க' என கோஷம் எழுப்பியபடி ரயில் என்ஜின் முன்பாக தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்து போராட்டத்தில் ஈடுபட்டார். இதைப்பார்த்து ரயில் பயணிகளும், நிலையத்தில் நின்று கொண்டு இருந்தவர்களும் அதிர்ச்சி அடைந்தனர். இதனால் பரபரப்பான சூழல் நிலவியது. உடனடியாக அரக்கோணம் ரயில்வே பாதுகாப்புப் படை உதவி இன்ஸ்பெக்டர் ராமமூர்த்தி, ரயில்வே பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஞானசேகரன் மற்றும் பொலிஸார் வந்து, தண்டவாளத்தின் குறுக்கே படுத்திருந்த இளைஞரை தூக்கி அப்புறப்படுத்தினர். அதைத்தொடர்ந்து ரயில் தாமதமின்றிப் புறப்பட்டுச் சென்றது.

இதேவேளை, சேலம் மத்திய சட்டக் கல்லூரி மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வகுப்புகளைப் புறக்கணித்து, உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வருகிறார்கள். நேற்றுமுன்தினம் 2ஆவது நாளாக இந்தப் போராட்டம் தொடர்ந்தது. ஏராளமான மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் திரண்டனர். இலங்கை அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

அப்போது பொலிஸாருக்கும், மாணவர்களுக்கும் இடையே கடும்வாக்குவாதமும் தள்ளு - முள்ளும் ஏற்பட்டன.

ஆர்ப்பாட்டத்தின்போது காமராஜ்என்ற தம்பி பிரபாகரன் என்ற புனைப் பெயர் கொண்ட மாணவர், தான் கொண்டு வந்திருந்த மண்ணெண்ணையை உடலில் ஊற்றி தீக்குளிக்க முயன்றார்.

அப்போது அவர், 'தமிழ் இனம் வாழ்க' என கோஷம் எழுப்பினார். அவரை அருகில் நின்ற சகமாணவர்கள் தூக்கிச் சென்று தண்ணீர் ஊற்றி குளிப்பாட்டினர்.

மாணவர்களின் பிடியில் இருந்து தப்பித்த காமராஜ், அருகில் உள்ள மாணவிகள் விடுதி கட்டடத்தின் மீது ஏறி, கீழே குதித்துத் தற்கொலை செய்யப்போகிறேன் என மிரட்டினார். சகமாணவர்கள் அவரைக் காப்பாற்றினர்.



இதனால் சட்டக்கல்லூரி முன்பு பதற்றம் ஏற்பட்டது. தொடர்ந்து மாணவர்கள் கல்லூரி முன்பு தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதைத்தொடர்ந்து அங்கு துப்பாக்கி ஏந்திய துணை இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர். தொடர்ந்து பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

## ராஜீவ் கொலைக் கைதிகளுக்கு சிறையில் கூடுதல் பாதுகாப்பு

வேலூர், மே 22

ராஜீவ் கொலைக்கைதிகள் இருக்கும் வேலூர் சிறையில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற முருகன், சாந்தன், பேரறிவாளன், ஆயுள் தண்டனை கைதிகளான ராபர்ட்பெயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோர் வேலூர் ஆண்கள் சிறையிலும், நளினி வேலூர் பெண்கள் சிறையிலும் தண்டனையை அனுபவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் இலங்கையில் இராணுவத்துடன் நடந்த போரில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகன் கொல்லப்பட்டார் என இலங்கை அரசு நேற்றுமுன்தினம் அறிவித்தது.

அதைத்தொடர்ந்து வேலூர் சிறையை கியூ பிரிவுப் பொலிஸார் நேற்றுமுன் தினம் பார்வையிட்டனர். மேலும் கூடுதல் பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பேச்சுக்குச் சென்ற புலித் தலைவர்களையே சுட்டுக் கொன்றது இலங்கை இராணுவம்!

## குற்றஞ்சாட்டுகிறார் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர்

கோவை, மே 22

அமெரிக்காவின் எச்சரிக்கைக்குப் பயந்தே போர் முடிந்தது எனவும், பிரபாகரன் கொல்லப்பட்டார் எனவும் இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

போர் பகுதியில் இருக்கும் முதியவர்கள், குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று சமாதானப் பேச்சுக்குச் சென்ற புலிகள் அமைப்பைச் சேர்ந்த நடேசன், புலித்தேவன் ஆகியோரைத்தான் இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளது என்றும் அவர் கூறினார்.

செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்ததாவது:-

பிரபாகரன் கொல்லப்பட்டார் என ஏற்கனவே மூன்று முறை பொய்ச் செய்திகளை இலங்கை இராணுவம் வெளியிட்டுள்ளது. இதன் பின்னணியில் இந்திய உளவு அமைப்பான 'றோ' இருக்கிறது. இதுபோன்ற பொய்ச் செய்திகளைப் பரப்புவது கண்டனத்துக்குரியது.

அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவில்லையெனில் கடும் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் இலங்கையை எச்சரித்தன. அவ்விரு நாடுகளும் அடுத்த நடவடிக்கைக்குச் சென்றுவிடக் கூடாது என்பதற்காகவே போர் முடிந்து விட்டது எனவும், பிரபாகரன் கொல்லப்பட்டார் எனவும் இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.



அங்கிருந்து வரும் தகவல்களின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அடிப் படைப் பலம் சிதைய வில்லை. அவரது மண்ணில் பிரபாகரன் பாதுகாப்பாக இருக்கிறார்.

# ஐ.மு.கூட்டணி அரசமைக்க 322 எம்.பிக்கள் ஆதரவு வழங்குகின்றனர்

## இன்று பதவியேற்க மன்மோகனுக்கு ஜனாதிபதி அழைப்பு

புதுடில்லி, மே 22

மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியமைக்க 322 எம்.பிக்களின் ஆதரவு உள்ளது. இதற்கான கடிதத்தை ஜனாதிபதியிடம் மன்மோகன் சிங் நேற்றுமுன் தினம் கொடுத்து, ஆட்சியமைக்க உரிமை கோரினார். அதை ஏற்று, இன்று பதவி ஏற்க மன்மோகன் சிங்குக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

மக்களவைத் தேர்தலில் காங்கிரஸுக்கு 206 இடங்களும், காங்கிரஸ் தலைமையிலான ஐ.மு.கூட்டணிக்கு 261 இடங்களும் கிடைத்தன. கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த காங்கிரஸ் புதிய எம்.பிக்கள் கூட்டத்தில் பிரதமராக மன்மோகன் சிங் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பல கட்சிகள் ஆதரவு தெரிவித்ததை தொடர்ந்து ஐ.மு. கூட்டணிக்கு 322 எம். பிக்களின் ஆதரவு கிடைத்துள்ளது. ஆட்சி அமைக்க 272 உறுப்பினர்கள் ஆதரவு இருந்தால் போதும். ஐ.மு. கூட்டணிக்கு அதைவிட அதிகமாக 50 எம்.பிக்களின் ஆதரவுள்ளது.

ஐ.மு. கூட்டணிக்கு பெரும்பான்மைக்கும் அதிகமான பலம் இருப்பதைத் தொடர்ந்து, நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு சோனியாவும், மன்மோகன் சிங்கும் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றனர். ஜனாதிபதி பிரதீபா பட்டேலை சந்தித்து, 322 எம்.பிக்களின் ஆதரவு இருப்பதற்கான கடிதங்களைக் கொடுத்து, ஆட்சி அமைக்க உரிமை கோரினர்.

இதை ஏற்று, நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ற முறையில் மன்மோகன் சிங்கை 2ஆவது முறையாக பிரதமராக நியமித்து, அதற்கான கடிதத்தையும் ஜனாதிபதி பிரதிபா கொடுத்தார். இம் மாதம் 22ஆம் திகதி அன்று வசதியான நேரத்தில் ஜனாதிபதி மாளிகையில் தங்களது அமைச்சரவைக்கு பதவிப் பிரமாணம், மற்றும் ரகசிய காப்புப் பிரமாணம் செய்து வைக்க திட்டமிட்டு உள்ளேன் என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# ஈழத் தமிழருக்கு முழுமையான நிவாரணம்; பிரதமர் மன்மோகன் உறுதியளித்தாரம்

## கருணாநிதி பேட்டி

புதுடில்லி, மே 22

இலங்கைத் தமிழர் பகுதிகளில் நிவாரணத்திற்காக எவ்வளவு தேவையோ அவ்வளவையும் நிறைவு செய்வோம் என பிரதமர் உறுதி அளித்திருக்கிறார் - என்று முதல்வர் கருணாநிதி கூறினார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் காலையில் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியின் இல்லத்தில் மத்திய அரசின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினார்.

இது தொடர்பாக முதல்வர் கருணாநிதியை செய்தியாளர்கள் சந்தித்துக் கேட்ட கேள்விகளும் அவர் அளித்த பதிலும் வருமாறு -

கே - இலங்கைக்கு நிவாரணம் அளிப்பது பற்றி இச்சந்திப்பில் ஏதாவது கேட்டிருக்கிறீர்களா?

ப - இலங்கைத் தமிழர் பகுதிகளில் நிவாரணத்திற்காக எவ்வளவு தேவையோ அவ்வளவையும் நிறைவு செய்வோம் என்று பிரதமர் சொல்லியிருக்கிறார் - என்றார்.

முன்னதாக [illegible] நடந்த ஐக்கிய [illegible] டத்தில் முதல்வர் கருணாநிதி பேசியவை வருமாறு-

முதலாவதாக நாம் அடைந்துள்ள மகத்தான வெற்றிக்கு உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன். இதே அறையில் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நமது ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் முதல் கூட்டம் எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அப்போது நான்தான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராக சோனியா காந்தியை முன்மொழிந்தேன்.

மீண்டும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராக சோனியாகாந்தியை நான் முன்மொழிகிறேன்.

நம்மை மீண்டும் தேர்ந்தெடுத்த மக்களின் பெருவாரியான வாக்குகளைப் பெற்று அதே அறையில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். இது, கடந்த 5 ஆண்டுகளில் ஐக்கிய [illegible] கூட்டணி அரசின் மிகச் சிறப்பான செயற்பாடுகளினாலேயே நடந்தது - என்றார்.




## ராஜீவ் சிலைகளுக்கு பலத்த பாதுகாப்பு

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மரணம் என்றும் வெளியான செய்தியைத் தொடர்ந்து சென்னையிலுள்ள ராஜீவ் காந்தி யின் சிலைகள் ஒவ்வொன்றுக்கும் 2 பொலி ஸார் வீதம் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

நேற்று ராஜீவ் காந்தியின் நினைவு தினத்தை யொட்டி பொலிஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் ராஜீவ் காந்தியின் சிலைகள் ஏராளம் வைக்கப்பட்டுள்ளன. விஷமிகள் சிலைகளை சேதப்படுத்துவதைத் தடுப்பதற்காக அனைத்து சிலைகளுக்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சென்னையில் ராஜீவ் காந்தி மார்பளவு சிலைகள் 25இற்கும் மேல் உள்ளன. ஒவ்வொரு சிலைக்கும் 2 பொலிஸார் வீதம் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அவர்கள் நேற்றுமுன்தினம் இரவு விடிய விடிய சிலைகளுக்கு காவல் இருந்தனர்.

ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ் நினைவிடத்தை தகர்க்கப்போவதாக உளவுத் துறைக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து ராஜீவ் நினை விடத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. துணை இராணுவப்படையினர் நினைவிடத்தை சுற்றிலும் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். அஞ்சலி செலுத்த வந்தவர்கள் கடுமையான சோதனைக்கு பிறகே அனுமதிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று மணிவிழாக் காணும் நாயகரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.க.செல்வக்குமரன்

(S.L.P.S. I, Sp.Trained in Agriculture, M.A - Madras)

36 வருட ஆசிரியர் சேவையில் எமது பாடசாலையில் கடந்த 18 வருடங்கள் அதிபராக இருந்து எமக்கு சிறந்த வழிகாட்டியாகவும், மாணவர்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்பவராகவும், வருடந்தோறும் பொதுப் பரீட்சைகளிலும் போட்டிகளிலும் சிறந்த பெறு பேறுகளைப் பெற வழிகாட்டியும், ஊக்கமளித்தும், அடக்கத்துடனும் அமைதியுடனும் மென்மையான பேச்சினால் அனைவரையும் அரவ ணைத்தும், பாட சாலையை சிறந்த முன்னேற்ற பாதையில் இட்டுச் சென்று இன்று (22.05.2009) வெள்ளிக்கிழமை ஓய்வுபெறும் எமது அதிபர் திரு.க.கனகசபை செல்வக்குமரன் அவர்களை பாராட்டுவதோடு மேலும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று குடும்பத்தினருடன் வாழ வாழ்த்து கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைப்பீடம்
## ஊடக வளங்கள் மற்றும் பயிற்சிநிலையம்

இதழியல் டிப்ளோமா (முழுநேரம்) கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சை-2009

**அறிவித்தல்**

*20.05.2009 அன்று நடைபெறவிருந்த மேற்படி கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை 29.05.2009 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மு.ப 9.00 தொடக்கம் பி.ப 4.00 மணிவரை நடைபெறும். ஏற்கனவே தபாலில் பெற்ற அனுமதி அட்டை யுடன் பரீட்சார்த்திகள் தவறாது சமுகமளிக்கவும்.*

பதிவாளர்
21.05.2009

## இசை அரங்கேற்றமும் மிருதங்க அரங்கேற்றமும்

சங்கீத பூஷணம் திரு.வி.சிவஞானசேகரம் அவர்களின் சங்கீத மாணவனும்
கலாபூஷணம் திரு.க.ப.சின்னராசா அவர்களின் மிருதங்க மாணவனும்
இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை இசைத்துறை மாணாக்கனுமான

**செல்வன் அழகேசன் அமிர்தலோஜனன்**

அவர்களின் இசை அரங்கேற்றமும் மிருதங்க அரங்கேற்றமும்

காலம் :
23.05.2009
சனிக்கிழமை
காலை 8.15 மணி

இடம் :
இணுவில் கந்தசுவாமி கோவில்
இளந்தொண்டர்சபை மண்டபம்



கலா ரஸிகப்பெருமக்கள் அனைவரும் வருகை தந்து அரங்கேற்ற நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்

வட்டுவினி
இணுவில் மேற்கு, இணுவில்

திரு.திருமதி.அழகேசன் குடும்பம்.

## கண்ணீர்க் காணிக்கை

எமது கழகத்தின் நீண்டகால உறுப்பினரும் கலைவாணி முன்பள்ளியின் ஆரம்பகாலச் செயலாளரும் தற்போதைய கலைவாணி முன்பள்ளி ஆசிரியரான செல்வி த.தாட்சாயினியின் அன்புச் சகோதரருமான



அமரர்
**தம்பிராசா முகுந்தன் B.Sc.**
ஆசிரியர்

அவர்கள் கடந்த 18.05.2009 அன்று அகால மரணமானதையிட்டு துய றுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகம்,
கலைவாணி சனசமூக நிலையம்,
கலைவாணி முன்பள்ளி சமூகம்,
கலைவாணி விளையாட்டுக் கழகம்.

ஊரெழு.

## இசை, மிருதங்க அரங்கேற்றங்கள்

மருதனார்மடம், மே 22

சங்கீத பூஷணம் வி.சிவஞான சேகரத்தின் சங்கீத மாணவனும் கலாபூஷணம் க.ப.சின்னராசாவின் மிருதங்க மாணவனுமான செல்வன் அழகேசன் அமிர்தலோஜனனின் இசை அரங்கேற்றமும் மிருதங்க அரங்கேற்றமும் நாளை சனிக்கிழமை காலை 8.15 மணிக்கு நடைபெறவுள்ளன.

இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் இந்த நிகழ்வு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை ஆசிரியை திருமதி குககுமாரி விஜயரகுநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக ஊடகவள நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் செல்வி பாக்கியலட்சுமி நடராசா, ஓய்வுபெற்ற அதிபர் பொ.கமலநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

விழாவிற்கான மதிப்பீட்டுரையை முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கலாபூ ஷணம் எஸ்.கணபதிப்பிள்ளையும் வாழ்த்துரைகளை யாழ் பல்கலைக்கழக கணிதப் புள்ளிவிவரவியல் துறைத் தலைவர் கலாநிதி இ.விக்னேஸ்வரனும் இணுவில் இளந்தொண்டர் சபை ஆலோசகர் நா.கிருபாகரனும் நிகழ்த்துவர்.

(1-55)

## பரீட்சை மண்டப இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 22

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைக்கப்படவிருந்த இந்து தர்மாசிரியர்களுக்கான பரீட்சை மண்டபம் தவிர்க்க முடியாத காரணத்தினால் யா/சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(1)

## கத்திக் குத்துக் காயத்துடன் பெண் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், மே 22

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போது ஆத்திரமுற்ற கணவன் கத்தியால் குத்தியதில் மனைவி படுகாயம் அடைந்ததாகக் கூறி மனைவி யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நாவற்குழி தெற்கில் நேற்று முன்தினம் 5 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த த.சிவந்தினி (வயது-36) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

(1-9-78)

## யாழ்.மாநகரசபைப் பிரிவில் இயங்கும் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு திங்கள், வியாழனில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 22

யாழ்.மாநகர சபை சுகாதாரப் பகுதியின் ஏற்பாட்டில் உணவகங்களின் உணவு சுகாதாரம் தொடர்பான கருத்தரங்குகள் எதிர்வரும் 25 ஆம், 28 ஆம் திகதிகளில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற வுள்ளன.

இக்கருத்தரங்குகளில் திங்கட்கிழமை யாழ். நகரம், நல்லூர் ஆகிய பகுதிகளுக்கு உட்பட்ட உணவகங்களின் உரிமையாளர்களும் - வியாழக்கிழமை வண்ணார் பண்ணை, நாவாந்துறை, அரியாலை, குருநகர், கொழும்புத்துறை ஆகிய பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட உணவு நிலையங்களின் உரிமையாளர்களும் - கலந்து கொள்ளுமாறு யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுள்ளார்.

இக்கருத்தரங்கு 27 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அக் கருத்தரங்கு 28 ஆம் திகதியே நடை பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (1)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியர் செல்வி லூட்ஸ் மரியா அவர்களின் அன்புத் தாயார்

**அமிர்தநாதர் மேரி அல்போன்ஸா** (புனிதம்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி



எமது கனிஷ்ட மாணவன் க.சபேசனின்
அன்புத் தந்தை

**திரு.கதிரவேலு கந்தசாமி**

(ஓய்வுபெற்ற களஞ்சியக் காப்பாளர், ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி)

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மொறட்டுவ பல்கலைக்கழகம். 4 ஆம் வருட மாணவர்கள் (QS/FM).

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்
திருமதி இராஜகுமாரி வேணுகாந்தன் அவர்களின் பாசமிகு தாய்

**அமரர் செல்லத்துரை தங்கம்மா**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

(85506)

## 45 ஆம் நாள் நீங்காத நினைவலைகளும் நன்றி நவிலலும்



அமரர்
**ஆறுமுகம் பொன்னுத்துரை**
(ஓய்வுபெற்ற நில அளவை அதிகாரி)

கடந்த 07.04.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.05.2009) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் சபிண்டீ கரண கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வம் ஆறுமுகம் பொன்னுத்துரை அவர்கள் காலமான செய்தி அறிந்து நமக்கு ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் அளப்பரிய உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மூத்த விநாயகர் கோயிலடி,
கரணவாய், கரவெட்டி.

குடும்பத்தினர்.

## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை
## பரீட்சை நேரமாற்றம் தொடர்பான அறிவித்தல்

1) வணிக முதற் தேர்வு
2) வணிகமாணி பகுதி - II

மேற்படி வணிக முதற் தேர்வு மற்றும் வணிகமாணி பகுதி - II பரீட்சைகளில் 20.05.2009 (புதன்கிழமை) நடைபெறவிருந்து, தவிர்க்க முடியாத காரணத்தினால், பிற்போடப் பட்ட பின்வரும் பாடங்களுக்கான பரீட்சைகள், எதிர்வரும் 24.05.2009 (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்திலும், வெளிவாரிப் பரீட்சை மண்டபத்திலும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் ஏற்கனவே எம்மால் வழங்கப் பட்ட பரீட்சை அனுமதி அட்டையுடன் பரீட்சைகளுக்குத் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

| இல | பாடக்குறியீடு | பாடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|
| 01 | EX.COM.1.1 | வணிகக் கட்டமைப்பு Structure of Commerce | 24.05.2009 | 8.45 -11.45 |
| 02 | EX.COM.3.3A | உயர் கணக்கியல் Advanced Accounting | 24.05.2009 | 12.30 - 2.30 |

மேலதிக விவரங்களுக்கு 0212223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த வன்னி மக்களை மூன்றுமாத காலத்தில் சொந்த வீடுகளில் குடியமர்த்த ஏற்பாடு செய்யப்படும்

## அரசு இந்திய அதிகாரிகளிடம் உறுதி தெரிவிப்பு

கொழும்பு, மே 22

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மூன்று மாத காலத்திற்குள் அதாவது 180 நாள்களுக்குள் அவர்களது சொந்த வீடுகளில் குடியமர்த்துவதற்கான முழுமையான நடவடிக்கைகளை எடுப்பதாக இலங்கை இந்தியாவுக்கு உறுதியளித்துள்ளது?

கொழும்பு வந்துள்ள இந்திய அரசின் பிரதிநிதிகள் முக்கூட்டணிப் பிரமுகர்களுடன் நடத்திய சந்திப்பில் இத் தகவலைத் தெரிவித்துள்ளனர்.

மக்கள் மீள்குடியமர்த்த வசதியாக அப்பிரதேசங்களில் பாடசாலைகள், வீதிகள் உட்பட உள்கட்டுமானங்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான உதவிகளை இந்தியா வழங்கத் தயாராக இருக்கிறது என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் .

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் த. சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா அணி) பொதுச் செயலாளர் ரி.சிறிதரன் ஆகியோர் அடங்கிய முக்கூட்டு அணி (ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரை சந்தித்துப் பேசியுள்ளது.



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியப் பிரதிநிதிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் சந்தித்தபோது....

நேற்று முற்பகல் 11 மணியளவில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்புத் தொடர்பாக புளொட் தலைவர் சித்தார்த்தன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

நாராயணன், சிவ்சங்கர் மேனன், இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத், இந்தியத் தூதராக அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் ஷியாம் ஆகியோரும் உடனிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி யினர், இடம்பெயர்ந்த மக்கள் தங்களுடைய வீடுகளில் கூடிய விரைவில் குடியமர்த்தப்படல் வேண்டும் என்ற கோரிக்கையுடன் வடக்கு - கிழக்கில் மீண்டும் சரியான ஜனநாயகமும், பன்முகத்தன்மையும் நிலைநிறுத்தப்பட வேண்டும், வன்முறைக் கலாசாரம் முற்றாக முடிவுக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும் எனவும வலியுறுத்தினா.

அத்துடன் அர்த்தமுள்ள ஒரு சரியான அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு இந்திய அரசு முழுமையான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்ற ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குத் தடுப்பூசிகள் வழங்கப்படவில்லை. அவர்களுக்கான தடுப்பூசிகள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான சத்துணவுகள் என்பன உடனடியாக வழங்கப்பட வேண்டும். மற்றும் சுத்தமான குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

இடம்பெயர்ந்த மக்களை 180 நாள்களுக்குள் அவர்களது சொந்த வீடுகளில் குடியமர்த்துவதற்கான முழுமையான நடவடிக்கைகளை எடுப்பதாக இலங்கை அரசு தங்களுக்கு உறுதி அளித்துள்ளதாகவும், அவ்வாறான சந்தர்ப்பத்தில் அப்பிரதேசங்களுக்கான பாடசாலைகள், வீதிகள் உட்பட அனைத்து உட்கட்டுமானங்களையும் ஏற்படுத்தித் தருவதற்கான உதவிகளை வழங்க இந்திய அரசு தயாராக இருப்பதாகவும் கொழும்பு வந்த இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரசியல் தீர்வு தொடர்பான அழுத்தங்களை இந்தியா ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக இந்தியத் தரப்பினர் சுட்டிக்காட்டினர். அத்துடன் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள இளைஞர், யுவதிகள் மத்தியில் உயர்கல்விக்குத் தகுதியானவர்களுக்கு இந்தியாவில் உயர்கல்வி கற்க விசேட அடிப்படையில் புலமைப்பரிசில் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டுமென விடுத்த வேண்டுகோளை இந்தியத் தரப்பு ஏற்றுக்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1-சி)

# விடுதலை என்பது மக்களின் இதயங்களில் வாழ்வது; தமிழர்கள் ஏற்கக் கூடிய அதிகாரப் பகிர்வு தேவை

## இடதுசாரி முன்னணி அறிக்கை

கொழும்பு, மே 22

யுத்தம் முடிந்துவிட்டது என்றும் புலிகளின் தலைவர்கள் கொல்லப்பட்டுவிட்டனர் என்றும் அரசு அறிவித்துள்ளது. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் விடுதலை என்பது மக்களின் இதயங்களிலும், மனங்களிலும் வாழ்கின்ற ஒன்றாகும்.

இந்த நாட்டில் உண்மையான அமைதி ஏற்பட வேண்டுமென்றால் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்று இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

உண்மையில் இந்த நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமானால் தமிழ் மக்களுடன் பேச்சுகளில் ஈடுபட்டு, அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வின் மூலமே சமாதானத்தை நிலைபெறச் செய்யமுடியும்.

இன்று தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சர்வதேசத்துக்குள் பிரவேசித்துள்ளது. குறிப்பாகத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தென்னிந்தியாவில் அதிக தாக்கத்தை செலுத்தி வருகிறது.

எனவேதான் பல்வேறு மட்டங்களில் இருந்தும் தமிழ் மக்களுக்கு அதிகாரத்தை வழங்குமாறு அழுத்தங்கள் வரத் தொடங்கியுள்ளன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சகலருக்கும் நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியான வெற்றிகளை இலக்காகக் கொண்டே தமது மூலோபாயங்களை வகுத்திருந்தனர். இவர்கள் வெகுஜன எழுச்சியின் ஊடாக விடுதலையை அடைய அதிகம் சிரத்தை எடுக்கவில்லை. மேலும் சர்வதேச ரீதியாக உள்ள தொழிலாளர் அமைப்புகள், வெகுஜன அமைப்புகளின் ஆதரவைப் பெறவும் அதிக நாட்டம் கொண்டிருக்கவில்லை. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற சர்வதேச ரீதியாக உள்ள தொழிலாளர் அமைப்புகளின் ஆதரவு நிச்சயம் பெறப்பட வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# பாதிப்புற்ற மாணவர் திறனை வெளிக்கொணரும் முதலாவது கண்காட்சி நாளை இணுவிலில்

யாழ்ப்பாணம்,மே 22

குடாநாட்டில் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் திறமையை வெளிக்கொணரும் நோக்கிலான சித்திரக் கைவேலைக் கண்காட்சிகள் கோட்ட, வலய, தேசிய ரீதியில் நடத்தப்படவுள்ளன.

மானிப்பாய் கல்விவலயப் பாடசாலைகள் பங்குகொள்ளும் முதலாவது கண்காட்சி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

''கோட்ஸ் ஓன் ஷில்றன்ஸ் பவுன் மேசன்'' (Gods Own Childrens) அமைப்பு ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் யாழ். கல்வி வலயங்கள் ஊடாக இக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கண்காட்சி குடாநாட்டில் கல்விக் கோட்ட, வலய ரீதியில் நடத்தப்பட்டு இறுதியில் மாவட்ட ரீதியிலும் சிறுவர் தினத்தை ஒட்டி ஜூலை 5,6,7 ஆம் திகதிகளில் கொழும்பிலும் நடைபெறவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டிருக்கும் மாணவர்கள் அதாவது உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தந்தை, தாய் அற்றோர், வறுமையின் பிடியில் வாழ்வோர், மெல்லக் கற்போர் என அனைத்து மாணவர்களின் திறமைகளையும் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் வெளிக்கொணருவதே இக் கண்காட்சியின் நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டது.(அ-1)

# ஷேவாக் - கம்பீர் அதிரடியால் டெல்லி அசத்தல் வெற்றி இறுதிப் போட்டியிலும் தோல்வியுடன் விடைபெற்றது மும்பை

செஞ்சூரியன் மே 22

ஐ.பி.எல். ருவன்ரி -20 போட்டிகளின் நேற்றைய ஆட்டத்தில் டெல்லி டேர் டெவில்ஸ் அணியிடம் 4 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்து வெளியேறியது மும்பை இந்தியன்ஸ் அணி.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவது ஐ.பி.எல். ருவன்ரி -20 போட்டிகளின் 55 ஆவது ஆட்டம் செஞ்சூரியன் சுப்பர் ஸ்போர்ற்ஸ் பார்க் மைதானத்தில் நடைபெற்றது.இதில் ஷேவாக் தலைமையிலான டெல்லி டேர் டெவில்ஸ் அணியும் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி டேர் டெவில்ஸ் முதலில் மும்பை இந்தியன்ஸை துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மும்பை சார்பில் ஆரம்பவீரர்களாக சனத் ஜெயசூரியாவும், டெண்டுல்கரும் களமிறங்கினர்.தனது முதலாவது பந்தினை எதிர்கொண்ட ஜெய்சூரியா நானெஸின் பந்தில் 'எல்.பி.டபிள்யூ' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். ஆனால் பொறுமையாக ஆடிய டெண்டுல்கர் 8 பௌண்டறிகளுடன் 46 ஓட்டங்களைப் பெற்றார்.



டுமினி இம்முறை 9 ஓட்டங்களுடன் வெளியேற அஷ்ரார்புல் 2 ஓட்டங்களுடன் சங்வானின் பந்தில் வில்லியர்ஸிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார். சரிவு நோக்கி சென்று கொண்டிருந்த மும்பை அணியைத் தாங்கிப் பிடித்த ரஹானே 5 பௌண்டறிகள் 2 சிக்ஸர்களுடன் 56 ஓட்டங்களைப் பெற்றார். ஆனால் ஏனைய வீரர்களின் ஒத்துழைப்பு இவருக்கு கிடைக்கவில்லை.

நாயர்(4), ஷா(12), மலிங்க(0) என வெளியேற ஹர்பஜன் சிங் 12 ஓட்டங்களுடனும் குல்குர்னி ஓட்டம் எதனையும் பெறாமலும் களத்தில் இருக்க 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 24 உதிரிகள் அடங்கலாக 165 ஓட்டங்களைப் பெற்றது மும்பை இந்தியன்ஸ்.

டெல்லி டேர் டெவில்ஸ் சார்பில் பந்து வீசிய நானெஸ் 3 விக்கெட்டுக்களையும் சங்வான் 2 விக்கெட்டுக்களையும் சால்வி 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

166 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி டேர் டெவில்ஸ் அணியின் ஆரம்ப வீரர்கள் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினர். கம்பீர் 47 ஓட்டங்களையும் வோர்னர் 15 ஓட்டங்களையும் பெற்றனர். அதிரடி வீரர் ஷேவாக் 27 பந்துகளை எதிர்கொண்டு 5 பௌண்டறிகள் 2 சிக்ஸர்களுடன் 50 ஓட்டங்களைப் பெற்றார். டில்சான் அதிரடியாக 2 பௌண்டறிகள் 2 சிக்ஸர்களுடன் 24 ஓட்டங்களைப் பெற பாரியா(2), ஏ.பீ.டீ. வில்லியஸ்(6) என ஆட்டமிழந்தாலும் தினேஸ் கார்த்திக் ஓட்டம் எதனையும் பெறாமலும் மிஷ்ரா 4 பந்துகளில் 13 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றி சந்தர்ப்பத்தைப் பெற்றார்.

டெல்லி டேர் டெவில்ஸ் 17.3ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கான 166 ஓட்டங்களைப் பெற்றது.

மும்பை இந்தியன்ஸ் சார்பில் பந்து வீசிய ஹர்பஜன்சிங் 4 விக்கெட்டுக்களையும் மலிங்க, குல்குர்னி, தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக டெல்லி டேர் டெவில்ஸின் அதிரடி நாயகனும் அணித் தலைவருமான வீரேந்தர் ஷேவாக் தெரிவானார். (06)

## ஐ.பி.எல். அணிகளின் தற்போதைய நிலை

| அணி | ஆட்டம் | வெற்றி | தோல்வி | சமநிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| டெல்லி டேர் டெவில்ஸ் | 14 | 10 | 4 | 0 | 20 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 14 | 8 | 5 | 1 | 17 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 14 | 8 | 6 | 0 | 16 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 14 | 7 | 6 | 0 | 14 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 14 | 7 | 7 | 0 | 14 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 14 | 6 | 7 | 1 | 13 |
| மும்பை இந்தியன்ஸ் | 14 | 5 | 8 | 1 | 11 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 14 | 3 | 10 | 1 | 07 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் பகுதியை பார்வையிட்டார் நம்பியார்!

கொழும்பு, மே 22

இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடு கள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் சிறப்புப் பிரதிநிதி விஜய் நம் பியார் நேற்று வவுனியாவில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கான முகாம்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டார். அத்துடன், இறுதி மோதல்கள் இடம் பெற்ற முள்ளிவாய்க்கால்பகுதியையும்ஹெலிக் கொப்டரில் இருந்த வாறு பார்வையிட்டார்.



மனிக்பாமில் உள்ள நலன்புரி நிலையத்துக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரியுடன் நம்பியார் சென்றபோது...

நேற்று வியாழக்கிழமை காலை கொழும்பில் இருந்து விசேட ஹெலிக்கொப்டர் மூலம் வவுனியா சென்ற நம்பியார், அங் குள்ள மனிக்பாமில் அமைக் கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களைப் பார்வையிட்டார்.

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமிக் கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திர சிறி, நம்பியாரை வர வேற்றதுடன் முகா மின்நிலைமைகள்தொடர் பாகவும் அவருக்கு விளக்கிக் கூறினார்.

மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனும் நம்பியாருக்கு முகாம் நிலைமைகளை விளக்கினார் என தெரிவிக்கப்படுகிறது.

மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர் அந்தப் பகுதியை வானத்தில் இருந்துபார்வையிட்ட முதல் வெளிநாட்டுப் பிரதிநிதி இவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர்கள் எண்ணிக்கை ஒதுக்கீட்டில் அதிருப்தி; தி.மு.க. வெளியிலிருந்து அரசுக்கு ஆதரவு வழங்கும்

புதுடில்லி, மே 22

இந்திய மத்திய அரசுக்கான காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணி அமைச்சரவையில் தங்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் தர காங்கிரஸ் கட்சியின் மறுப்பதை அடுத்து புதிய அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவளிக்க முடிவு செய்திருப்பதாக தி.மு.க. அறிவித்துள்ளது.

புதிய அமைச்சரவை இன்று வெள்ளிக்கிழமை மாலை பதவியேற்க உள்ள நிலையில், தி.மு.க. இந்த முடிவை அறிவித்துள்ளது.

ஐந்து முழு அமைச்சர் பதவியும், நான்கு இணை அமைச்சர் பதவியும் தர வேண்டும் என்று தி.மு.க. கோரியதாகக் கூறப்படுகிறது. அந்தக் கோரிக்கையை காங்கிரஸ் நிராகரித்துவிட்ட நிலையில் மூன்று முழு அமைச்சர்கள் இரண்டு இணை அமைச்சர் தனிப்பொறுப்பு மற்றும் இரண்டு இணை அமைச்சர் பதவிகளை தி.மு.க. கோரியுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், காங்கிரஸ் அதற்கும் ஒப்புக்கொள்ளவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து காங்கிரஸ் தலைமையிலான அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவளிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக தி.மு.க.வின் நாடாளுமன்றக் கட்சித் தலைவர் டி.ஆர்.பாலு செய்தியாளர்களிடம் அறிவித்தார். (அ)

# வெற்றிக் கொண்டாட்டம்; பெருந்தன்மை வேண்டும்

## - ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, மே 22

இலங்கை அரசு விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டமையை கொண்டாடு வதில் நாட்டு மக்கள் பெருந்தன்மையாக நடந்து கொள்ள வெண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

யாருடைய மனங்களையும் எந்த வகையிலும் புண்படுத்துவதற்கு இடமளிக்காத வகையில் இந்தக் கொண்டாட்டங்கள் அமைய வேண்டும் என்பதை மக்கள் உறுதி செய்ய வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

சில சந்தர்ப்பங்களில் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் தொல்லைக்குள்ளாக்கப் பட்டதாகவும், நிந்திக்கப்பட்டதாகவும், கொண்டாட்டங்ளில் கலந்து கொள்ளுமாறும் வற்புறுத்தப் பட்டதாகவும் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த சிலரும், இடது சாரிக் கட்சிகளின் குழு ஒன்றைச் சேர்ந்தவர்களும் கூறியுள்ளனர் என்று பி.பி.ஸி. தமிழோசை தெரிவித்தது. (அ)

# ஜனாதிபதி மஹிந்தாவுக்கு ராஜீவ் காந்தி விருது

கொழும்பு, மே 22

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு 'ராஜீவ் காந்தி' விருது வழங்கப்படவுள்ளது. கடந்த மூன்று தசாப்தகாலமாக நிலவி வந்த போரை குறுகிய காலத்திற்குள் நிறைவு செய்ய வழிகாட்டல்களை வழங்கினார் என்பதற்காக இலங்கை ஜனாதிபதிக்கு விருது வழங்கப்படுகிறது. அகில இந்திய பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி அமைப்பினால் இந்த விருது வழங்கப்படவுள்ளதாக அமைப்பின் தலைவர் எம்.எஸ். வித்தா தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் உள்ள இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் சி.ஆர்.ஜெயசிங்கவைச் சந்தித்தபின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போது மேற்கண்ட தகவலை வித்தா தெரிவித்துள்ளார்.

அகில இந்திய பயங்கரவாத எதிர்ப்பு முன்னணியின் 15 பேர் கொண்ட குழு குறுகிய காலத்திற்குள் இலங்கை சென்று ராஜீவ் காந்தியின் பெயரால் விருது வழங்கும் என்றும் வித்தா கூறினார். ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டு 18 வருடங்கள் நிறைவடையும் வேளையில் பிரபாகரன் அழிக்கப்பட்டமை இந்தியாவுக்கு வழங்கப்பட்ட பரிசு எனவும் வித்தா மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)

# கொழும்பில் இன்று பாடசாலைகளுக்கு லீவு

கொழும்பு, மே 22

நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ள இராணுவத்தினருக்கு மரியாதை செய்யும் முகமாக இன்று சில பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி, இன்று ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் கொழும்பு ஆகிய கல்வி வலயங்களிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படவுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த கல்வி வலயங்களில் இராணுவத்தினருக்காக விசேட வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இன்று விடுமுறை வழங்கப்படும் பாடசாலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழமைபோல் இயங்கும். (சி)

# பயங்கரவாதத்தின் மூல வித்தை அழித்துவிட்டோம்; பத்மநாதனுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்

## ஊடகத்துறை அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, மே 22

பயங்கரவாதத்தின் மூல வித்தை நாம் அழித்துள்ளோம். எனவே விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் தலைதூக்கும் சாத்தியம் அறவே இல்லை.

அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான அநுர பிரிய தர்ஷன யாப்பா இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக்காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைக் கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

புலிகள் இயக்கத்தின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் செ.பத்மநாதன் வெளியிட்டுள்ள கருத்துக்களை நாம் அலட்சியம் செய்கிறோம். அவர் சர்வதேசப் பொலிஸாரால் தேடப்படும் ஒரு குற்றவாளி. குற்றவாளிகளைப் பறிமாறிக்கொள்ளும் ஒப்பந்தத்தில் சர்வதேச நாடுகளுடன் இலங்கையும் கையொப்பம் இட்டுள்ளது. எனவே இவ்வாறானவர்களுக்கு எதிராக இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் - என்றார்.

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என பி.ரி.ஐ.செய்தி நிறுவனம் தெரிவித்தது.

ஏற்கனவே 24 இந்திய வைத்தியர்கள் போரில் காயமடைந்தவர்களுக்கு புல்மோட்டை தள வைத்தியசாலையில் வைத்து சிகிச்சை வழங்கி வருகின்றனர். (அ-1)

## ஒன்றுவிட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடைமுறை இன்று முதல் மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

மாவட்டச் செயலகத்தில் இன்று பயணம் மேற்கொள்வதற்காக அனுமதிச்சீட்டினை பெற்றுக்கொண்டவர்களும் அவசர தேவையின் நிமித்தம் செல்ல இருப்பவர்களும் இன்று காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (1)

## உதயன் ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனு நேற்றுஎடுத்துக் கொள்ளப்பட்டது.

தாம் விடுதலை செய்யப்பட்டிருப்பதால் இந்த மனுவைத் தொடர்வதற்குத் தாம் விரும்பவில்லை எனத் தெரிவித்து மனுதாரர் அனுப்பிய கடிதம் அவரது சட்டத்தரணியால் நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் மனுவை வாபஸ் பெற அனுமதித்தது.

இதேசமயம், அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள வித்தியாதரனுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது குறித்து முற்றாகப் பரிசீலித்து முடிவு செய்யும் விவகாரம் பொலிஸ் மாஅதிபரின் பரிசீலனையில் இருப்பதால், அதற்குத் தேவையான நடவடிக்கையை அவர் எடுப்பதற்கு இடமளித்து உயர்நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜரானார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யேறத் தூண்டும் காரணிகள் என்னவென்பது குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பயங்கரமான மோதலுக்கு அப்பால் இந்த மக்களை அவுஸ்திரேலியாவுக்கு வரத் தூண்டுதலாக அமையக் கூடிய காரணிகள் குறித்து கவலை கொண்டுள்ளோம் என்றும் ஸ்டிபன் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

## பத்மநாதன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை 1.30 மணியளவில் காலமானார்.

காரைதீவில் 30.04.1948 ஆம் ஆண்டு பிறந்த கனகசபை பத்மநாதன், 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார்.

(3ஆம் பக்கமும் பார்க்கவும்)

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பிய ஒன்றியத்திற்குத் தலைமை வகிக்கும் செக்குடியரசு விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப் பட்டுள்ளது.

மனித உரிமை கவுன்ஸில் அமர்வின் மூலம் அர்த்தமுள்ள முடிவொன்று எட்டப்படுமென அந்த அறிக்கையில் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நீண்டகால மோதல்கள் காரணமாக மனித உரிமை மற்றும் மனிதாபிமான சூழலில் ஏற்பட்ட வீழ்ச்சியை சீர்செய்வதற்கு மனித உரிமைக் கவுன்ஸிலுடன் இணைந்து செயற்படப் போவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (அ-சி)

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயத்தில் ஒரு திட்டவட்டமான பதிலை வழங்கமுன்னதாக இதுபற்றி நாம் முதலில் அறிந்துகொள்ள விரும்புகின்றோம். அதற்கு முன்னர் தற்போது காணப்படும் உணர்ச்சிப் பெருக்குகள் தணிய வேண்டும் எனக் கருதுகிறோம் - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

விடைபெற்றுச்சென்ற இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கனரக ஆயுதங்களை பாதுகாப்பு வலயத்திற்குள் பயன்படுத்துவ தில்லை என்ற இலங்கை அரசின் உத்தரவாதம் தொடர்பில் இராணுவத்தினரால் சில மீறல்கள் இடம்பெற்றுள்ளன எனக் குறிப்பிட்டிருந்தார். இதுபற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பிலும் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது தொடர்பாக பல்வேறு தரப்பிலிருந்தும் அதிகமான கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வருகின்றன. நீங்கள் இவ்வாறான விசாரணைகளுக்கு ஆதரவளிப்பீர்களா?, அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தவை தொடர்பில் உங்கள் பிரதிபலிப்பு என்ன - என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சிவ்சங்கர் மேனன் -

### உணர்ச்சிப் பெருக்குகள் தளரவேண்டும்

இதனை உறுதிப்படுத்தும் நிலையிலோ அன்றேல் நிராகரிக்கும் நிலையிலோ நாம் இல்லை. நாம் களத்தில் இருக்கவில்லை. ஆகவே, எம்மால் இதனை உறுதி செய்யவோ, நிராகரிக்கவோ முடியாது. கடந்த சில வாரகாலப்பகுதியில் உணர்ச்சிப் பெருக்குகள் அதிகரித்துக் காணப்பட்டமையும் இதுபோன்ற கருத்துகள் பலவற்றிற்கு காரணமாக இருக்குமோ என நான் கருதுகின்றேன். இதுவிடயத்தில் ஒரு திட்டவட்டமான பதிலை தரமுன்னதாக நாம் இந்த விடயத்தை அறிந்துகொள்ள விரும்புகின்றோம்.

இதன்மூலம் எதனை அறிந்துகொள்கின்றோம் என பார்ப்போம். இதற்கு முன்பாக தற்போதுள்ள உணர்ச்சிப்பெருக்குகள் தணியவேண்டும் என நினைக்கின்றேன் - என்றார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் தலைவரது மரணம் தொடர்பாக இலங்கை வழங்குகின்ற நிலையில் நாம் அதனை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை - என்று இந்திய பாதுகாப்பு ஆலோசகர் என்.கே.நாராயணன் தெரிவித்தார்.

இருந்தபோதும் நாம் இலங்கை அரசிடம் மரணச்சான்றிதழைக் கோரியிருக்கின்றோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிரபாகரனின் அடையாளம் தொடர்பாக பலவிதமான சர்ச்சைக்குரிய கருத்துகள் கிளப்பப்படுகின்றன. இதுதொடர்பில் இந்திய அரசு மரபணுச்சோதனை, அல்லது அதிலும் தெளிவான பரிசோதனை மேற்கொள்ளப்படவேண்டும் என வலியுறுத்தினீர்களா என இந்தியப் பெண் ஊடகவியலாளர் ஒருவர் வினவியதற்கு பதிலளித்த எம்.கே. நாராயணன் -

இலங்கை அரசாங்கம் பகிரங்கமான உறுதிமொழியை வழங்குகின்றநிலையில் நாம் அதனை ஏற்போம். இருந்தும், நாம் இலங்கை அரசின் மரணச்சான்றிதழுக்காகக் காத்திருக்கிறோம்.

அதன்மூலமாக ராஜீவ் காந்தி படுகொலை வழக்கை மூடிவிடமுடியும். இதற்கு மேலாக எம்மால் எதையும் செய்யமுடியாது. இந்த விடயம் தொடர்பாக அதிகாரிகளுடனான பேச்சுகளின் போதும் நாம் வினவியிருந்தோம். இலங்கை ஜனாதிபதியின் பிரசன்னத்தின் முன்பாக கூட நாம் இவைகுறித்து கேள்வியெழுப்பியிருந்தோம். இதன்போது பிரபாகரன் தொடர்பான உத்தியோக பூர்வமான மரணச்சான்றிதழை வழங்குவோம் என அவர்கள் உறுதியளித்துள்ளனர் - என்றார். (அ-சி)

விற்பனையாகின்றன
விடய ஆய்வு
விலை 150/-
B.ED தெரிவு
A E Pomi
விலை 150/-
தொகுப்பு:- த. நவரத்னராசா
பூபா லசிங்கம்,
அன்னை,
பூநீலங்கா,
நூல்சாலை

கணினிப் பயிற்சி தொ.பே:- 077 9672038
Ms Office, DTP, Internet & E-mail ஆகிய கற்கை நெறிகள் உங்கள் வீடுகளிற்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும்.

SUBRA - (14)
சித்தன்கேணி
பௌதிகவியல் - 2011 A/L
பொறியியல்
ஆரம்பம்- 23.05.2009
Sat, Sun 5.00 - 6.00 p.m
By: SCIENCE CORNER
ஆசிரியர்

கற்சுமி வெளியீடு
தரம் 1,2,3,4,5, கணிதம் நுண்ணறிவு வினாத்தாள்கள்
தரம் 6 - 11 கணிதபாட வினாத்தாள்கள்
வெளிவந்து விட்டன
உங்கள் வழமையான முகவரிடம் பெறலாம்
கற்சுமி, நாவலர் வீதி, யாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.